உ

கடவுள் துணை

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும்பிரசுரமாகும்.

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௧௦.] விரோதிகிருதுஞூ தைமீ [பகுதி-௩

உள்ளுறை.

பாரதரகசியம்:—ஸ்ரீமத்-P. S. சுப்பிரமணிய ஐயர். ௧௨௫
சாவாவுடம்பு:—ஸ்ரீமத்-சி. கணேசையர். ௧௩௧
கையறுநிலை:—கவிஞர்கள். ௧௩௬
முடிசூட்டுவைபவம்:—ஸ்ரீமத்-P. R. கிருஷ்ணமாசாரியர். ௧௫௨
மங்கலவாழ்த்து:ஸ்ரீமத்-அரங்கசாமி ஐயங்கார். ௧௫௮
ஸ்ரீ மீனாக்ஷி பதிகம்:—உமாதாஸ். ௧௬௦
பூகோளம்:—ஸ்ரீமத்-சோமசுந்தரதேசிகர். ௧௬௨
புத்தகக்குறிப்பு, பிழைதிருத்தம்:—பத்திராதிபர். ௧௬௯
தனித்தமிழ்ப் பரீக்ஷைத் தேர்ச்சி:— } தமிழ்ச்சங்கம் பிரசிடெண்ட். ௧௭௦
நோட்டீஸ்:— } ௧௭௧
திருமந்திர நூறுபாட்டுக்குரை:— } ஸ்ரீமத்-சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர். ௧
அகப்பொருள் விளக்க மூலமுமுரையும்:— } ஸ்ரீமான்-பொ. பாண்டித்துரைத் தேவர். ௧௪௫
மதுரைத் தமிழ்ச்சங்கத்து வரவுசெலவு கணக்கு:—

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றக்கு ரூ 4.] 1912. [தனிப்பிரதி அணு-8.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

142

மறந்துவிடாதீர்கள்!

உண்மையில் லாபம் அடைவீர்கள்.

உங்களுக்குப் பட்டுப்புடவைகள், ரவிக்கைக்குட்டைகள், வெண்பட்டு வேஷ்டிகள், பட்டுபேஸ்காருக்கள், மடிதாவளிகள், உருத்திராக்ஷங்கள் முதலிய சாமான்கள்வாங்க விருப்பமுண்டானல் உடனே ஸ்ரீ காசிப் பட்டுப் பீதாம்பர வேர்ஹவுஸ், கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனிக்கு எழுதுங்கள். உங்களுக்கு அவர்கள் அனுப்பும் தினுசுகள் நல்ல திருப்தியைக்கொடுக்கும். சகலவிதப் பட்டுப்புடவைகளின் விலைகளடங்கிய பெரியகேட்லாக் இனமாகஅனுப்புவார்கள். உடனே உங்கள் விலாசம் தெரிவியுங்கள்.

K. S. MUTHIAH & Co.,

The Silk Pitamber Ware-House,

BENARES CITY.

எழுதும் நண்பர்கள் இப்பத்திரிகையிற் கண்டதாக எழுத வேண்டுகிறேன்.

உ

விளம்பரம்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்று மாதம்தோறும் வெளியாகும் "செந்தமிழில்" பிரசுரமாகவேண்டிக் கருதியனுப்புகிற வித்தியா விஷயமானதும், சாஸ்திரவுணர்ச்சியுள்ளதுமான விஷயப்பிரவசனங்களையும், பத்திரிகைக்கனுப்புஞ் சமாசாரங்களையும், ஆராய்ந்தபிப்பிராய மெழுத அனுப்புகிற புஸ்தகங்களையும், நூதன புஸ்தக ஆராய்ச்சி விஷய சமாசாரங்களையும், "செந்தமிழ்"ப்பத்திரிகை விஷயமாய் ஏற்படக்கூடிய சகலவித லெட்டர்களையும், மணியார்டர் வகைபறுக்களையும், ஷை தமிழ்ச்சங்கம் அச்சாபீஸில் செய்யவேண்டிய வேலைகளையும், தமிழ்ச் சங்கத்தோடு சேர்ந்திருக்கிற சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை விஷயமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய சகல தகவல்களையும் பற்றி எழுதிக்கொள்ள வேண்டியவர்கள் நாளது தேதிமுதல் ஷை தமிழ்ச்சங்கம் மானேஜருக்கு எழுதவேண்டியது.

T. A. Subuvenkatarama Aiyer,
Manager, 9—3—1912.

PRICE
12 AS.
PER BOTTLE.

Hair Troubles Avoided

By continually using such a
preparation as

KUNTAL-KAUMADI

THE NATIONAL HAIR OIL.

You keep the scalp moist and cool. The roots of the Hair are supplied with energy and nourishment and the hair maintained in the best possible condition.

Price per Big Phial As. 12 only. Per V.P.P. Rs. 1-3.
" " 3 Rs. 2. only. " " Rs. 2-11.

TRY IT TO-DAY.

Sole Agents to Madras Presidency,

M. Shaw Heerdayal & Co.,
144-5. China Bazaar Road,
Madras.

KAVIRAJ R. C. SEN L. M. S.
216, Cornwallis Street, Calcutta.

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-௧௦.] விரோதிகிருது௵ தை௴ [பகுதி-௩.

பாரத ரகசியம்.

இவ்வாரியா வர்த்தத்தில் வேதம், ஸ்மிருதி, இதிகாசம், புராணமுதலிய பலவிதமான பூர்வப்பிரமாணங்கள் ஆரியர்களாற் றொன்றுதொட்டுக் கொண்டாடப்பெற்று வருவதிற் புராணங்களைக் கீழ்ப்படியாகவும் இதிகாசங்களைமாத்திரம் வேதங்களுக்குச் சமானமுள்ளவைகளாகவும் அல்லது அவ் வேதங்களின் தொடர்ச்சியாகவுங் கருதப்பட்டுவருவதை நாமறிந்திருக்கின்றோம். அஸ்ய மஹதோ பூதஸ்ய நிஶ்வஸிதம் ஏதத் யத்ருக்வேத: என்று வேதங்களை ஈசுவரனுடைய சுவாஸமாகப் பெரியோர்கள் அங்கீகரித்திருக்கின்றனர்.

அஃதெப்படியென்னில் நவீனர்களின் இயந்திரங்களிலொன்றாகிய (Phonograph) போனோகிராப் என்னுமியந்திரத்தில் ஒரு சமயத்தில் ஒருவர்செய்யும் சம்பாஷணை அல்லது சங்கீதம் முதலியன மறைவாக வமைந்திருந்து பின்னர் ஒருமுறையாகவச் சம்பாஷணையுஞ் சங்கீதமுதலியனவும் முற்கூறியவண்ணம் வெளிப்படுத்தப்படுவனபோல வேதங்களெல்லாம் ஈசுவரனுடைய சுவாஸ ரூபமாக வெளியாகிப் பின்னர்ச் சிதாகாசத்தி லுறைந்துகிடக்க மானிடர்களுடைய மனப்பக்குவத்திற்குத் தக்கவாறு அந்தந்தக்காலங்களுக்குப் பொருத்தமான வேதங்களை மகரிஷிகள் தங்களுடைய தவ வலிமையினாற் கண்டறிந்து (Phonograph இன் முன்னமைந்திருந்த சம்பாஷணை அல்லது சங்கீதத்தைக் கண்டறிந்து வெளிப்படுத்திக் கேட்போர் செவிக்கின்பமுதவும் பண்டிதனைப்போல) வெளியிட்டிருக்கின்றனர். அவர் அம்முறை யறியுந்தன்மைபற்றி ஸைஷ யஸ்யாஸ்ய ஈர

ஷாஸ: என்னுந் தாற்பரியமானது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. "பழைய பது" என்று பொருள்படும் புராணமென்னும் நாமத்தைப் புனையும் பதினெண் புராணங்களும், பதினெட் டுபபுராணங்களும், பூர்ணப் பிரமாணங்களாக வங்கீகரிக்கப்படாமல் 'ஸ்தாவகம்' என்றும் 'அர்த்த வாதம்' என்றும் 'கௌணம்' என்றுஞ்சொல்லித் தள்ளிவிடுவதையுஞ், சில சாஸ்திர நிரூபணக்கிரந்தங்களிற் புராணவசனத்தை (ஏதந் ந ப்ராமாண்யம் வசனாணஸ்வாக) புராணமாகையால் அங்கீகரிக்கத் தக்கதில்லை யெனமொழிந்தகற்றியிருப்பதையும் நாம் பார்க்கின்றோம். இதிகாசத்தின்முறை வழக்கத்தி லவ்விதமன்று. புராணங்களைப் போலவே இதிகாசமும் பலகதைகளின்றொகுதியாக வமைந்திருப் பினுமிதிகாசத்தை வேதமென வுட்கொண்டு பாராயணமுதலிய விசேஷ ஆசாரணைகளினாலதற்கு மிக்க மரியாதைசெய்வதை நாங் காண்கின்றோம். இதிகாசமென்னுஞ்சொல் (இதி + ஹ + ஆஸ) என்னும் மூன்று அசைகளாலமையப்பெற்றது. அதன்பொருள் இதி = இவ்விதமாக, ஹ = நிச்சயமாய், ஆஸ = இருந்தது எனப்பகுத்து 'நிச்சயமாய் இவ்விதமாகவிருந்தது' என்பதுதான். அஃதாவது புராணங்களினால் விவரிக்கப்படும் பொருள்களுக்கு ஸ்தாவகம், அர்த்தவாதம், கௌணம் முதலிய காரணங்களையமைத்து நிச்சயமான சுபாவமுரைக்கப் படாமல் இதிகாசத்திலடங்கிய பொருளுக்குமாத்திரம் நிச்சயமானசுபாவத்தை யுரைத்திருப்பதாக வெளியாகின்றது. இராமாயணமும் மகாபாரதமுமிதிகாசமென்னும் வகுப்புக்குளடங்கியவைகள். அவற்றுள் இராமாயணத்தைச் சாக்ஷாத் வேதமென்றும், மகாபாரதத்தை ஐந்தாவதுவேதமென்றும் நாம் கைக்கொண்டிருக்கின்றோம். அதற்குக் காரணம் யாது? அவைகளின் மொழியப்பட்டிருக்குங் கதைகளின் றத்துவத்தைப்பற்றி யொருவரும் ஐயமுறுவண்ணம் அவ்விரண்டுகிரந்தங்களையும் "இதிகாச"மென விசேஷப் பெயர்கொண்டு வழங்குவதற்குக் காரணமுண்டோ? பாத்மபுராணம், உமாஸம்ஹிதை, விஷ்ணுபுராணம், ஸ்ரீபாகவதம் முதலிய புராணங்களும் இராமாயண சரித்திரத்தையும் பாரத சரித்திரத்தையு மவைகள்போன்ற மற்றைய சரித்திரங்களையும் மிகத்தெளிவாக விவரிக்கினு மவற்றிற் கிதிகாசமென்னும் நாமம் வழங்காம

லவைகளையும் புராணமென்று கிழானவரிசையிற் சேர்ப்பதற்கென்ன காரணம்? வேதங்களில் ஐஹிகாமுஷ்யம், நிச்ரேயஸம் என்னும் பிரவிருத்தி, நிவிர்த்தி முறைகள் கூறப்படும்வண்ணம் இராமாயணத்திலும் மகாபாரதத்திலுங் கூறப்பட்டிருப்பின் அவைகளை வேதமெனவும் ஐந்தாவது வேதமெனவும் புகல்வது பொருந்தும். அப்படிக் கூறப்பட்டிருக்கின்றதா? சுபாவத்தில் இராமாயணம் மகாபாரதம் இவைகளில் மொழியப்பட்டிருக்குங் கதைகளுக்கும் மற்றையபுராணங்களின் மொழியப்பட்டிருக்குங் கதைகளுக்குமென்ன பேதமிருக்கின்றது? இப்பொழுது இராமாயணத்தின் றன்மையையுமதிற் கூறப்பட்டுள்ள சரித்திரத்தின் றத்துவார்த்தத்தையும் விசாரிப்பது அவசியமன்று. தனிமையாக அதைப்பற்றி விவரிப்பது உசிதமாகையால் மகாபாரத சரித்திரத்தின் இரகசியார்த்தத்தைமாத்திரமிங்கு ஆராய்ந்து பார்ப்போம்.

மகாபாரதத்தில் வியாசபகவான், திருதராஷ்டிரன், பாண்டு, விதுரன், பாண்டவர்கள் முதலியோருடைய உற்பத்திக்கிரமமும், ஐவர்கள் ஒருமனைவியை மணந்தவளுடன் காலமுறையாக அவர்கள் வாழ்ந்தனரென்னுங் கதையும் மிக்க அருவருப்புள்ளனவாகையாலன்னோர்களைக் கதாநாயகர்களாக மகாபாரதத்தில் வியந்துகூறியிருப்பது பொருந்ாதெனை ஐயமுறி னிதிகாசமென்னும் விசேஷவசனத்தினல் "நிச்சயமாக அவ்வாறிருந்தது" என்று திட்பமுறமொழியப்படுகின்றதே. ஐவருக்கு மனைவியான துரோபதையைப் பதிவிருதைகளின் சிரோபூஷணமாக யாங்கொண்டாடுவதற்குக் காரணம் யாது? சரித்திரங்களின்றன்மைகளை நன்காராய்ந்தோமெனச் செருக்குடன்கூறு மிக்காலத்திய பண்டிதர்களிற் சிலர் துரோபதையின்வரலா றக்காலத்திற் (Polyandry) பலபுருஷர்களொருமனைவியுடன் வாழ்ந்துவந்த வழக்கத்தைக்காட்டுகின்றதெனப் பிதற்றுவதற்கிடமுண்டோ? அவ்வாறுயின் பஞ்சபாண்டவர்தவிர வேறெவர்களாவதொருமனைவியுடன் கூடிவாழ்ந்தாரென்றகதை பாரதத்திலிருக்கின்றதா? பாரதம் ஆரம்பம்முதல் முடிவுவரை யொருபதியையே தெய்வமாகக்கொண்டு அறம்வழுவாதவனுடன்வாழ்ந்த குலமங்கையரின் பாதிவிருத்தியத்தைப் பலவிடங்களிற் கூறப்பட்டிருக்க அம்

முறையிலிருந் தொருத்திமட்டும் வழுவிநடந்திருப்ப தக்காலத்திய வழக்கமாகுமா? அப்பெரிய வழுவினுவிழுக்குற்ற அந்தத் துரோபதையை எல்லாவறங்களையும் குற்றமறக் கற்றவளென்றும், சத்தியபாமைமுதலிய மங்கையருக்குத் தருமோபதேசஞ் செய்யும் புனிதமுடையவளென்றும் பாரதங்கொண்டாடுவதற்கு முறையுண்டோ? ‘ஜீவதி ஜாரஜ: குண்ட:’ என்னும் வசனப்படி தன்கணவனிருக்க ஒருமனைவியவனையகற்றி வேறொருவனுடன்கூடி மக்களைப்பெறுவாளாயின் (வ்யபசாரிணீ) வியபசாரியென்பதும், அவளுடைய புத்திரர்கள் குண்டர்களென்பதும், அவ்விருவகையாரும் வர்ணாச்சிரம பாஹ்யர்களாக எவ்வித நல்வினைக்கும் யோக்கியர்களல்லரென்பதும், சாஸ்திரத்தின் கருத்தாயிருக்கப் பாண்டவர்களினன்னைமார்களும் பாண்டவர்களும் மேம்பாடடைவதற்குக் காரணமென்னை? இவைகளையும் இன்னுமிவைபோன்ற வேறு விசித்திரமான வரலாறுகளையும் நன்காராயின் பாரதத்தின்கதை வெளிப்படையாக ஒருவாறமைந்திருப்பினுமாரியநாட்டின் சநாதன தருமத்திற்குப் பொருத்தமான தாற்பரியமொன்று அக்கதையினுள் (அந்தர்க்கதம்) மறைபொருளாக வமைந்திருக்கின்றதென யாங்கருதுவதற் கிடமுண்டு. அவ்விதத் தாற்பரியமில்லாவிடின் மகாபாரதத்திற் கெவ்விதமேன்மையுங் கற்பிக்கவியலாது. அதற்கிதிகாசமென்ற பெயரும் பொருளற்ற விடுகுறியாகவே முடியுமன்றோ? ஆதலின் பாரதத்தி லமைந்திருக்கும் இரகசியார்த்தமென்னை?

அத்தியாத்ம தத்துவத்தைப் போதிக்கின்ற உபநிஷத்துக்களாயுள்ளவை யான்மாக்களை நான்குவகையினராகப் பிரித்துக்கூறுகின்றன.

(1) ஜீவன்முத்தர்களாயிருந்து பிராரப்தமாகியவிச்சரீரமொழிந்தவுடன் பிரமத்துடனொன்றாய்க்கலத்தலாகிய சாயுஜ்யமென்னுங் கைவல்யத்தை யடைகிறவர்கள். இஃது அத்வைதிகளுக்குமாத்திரமுரிய கொள்கை.

(2) உபாசனுபலத்தினு லர்ச்சிராதிமார்க்கமாகப் பிரமலோகத்திற்குச் (வைகுண்டம், கைலாயம், சத்தியலோகம்) சென்று பிறகு திரும்புதலற்ற முத்தியையுடையவர்கள்.

(3) இவ்வுலகத்தில் அறம்வழுவாது நடந்து அவ்வறத்தின் வலியினாற் சந்திரலோகத்திற்குச் (இந்திரன், வருணன் முதலியோருடைய வுலகம்) சென்றங்குச் சிலநாளிருந்து தருமபலன் தேய்ந்தவுடனிவ்வுலகத்திற்குத் திரும்பிவந்து ஜனிக்கும் கர்மிடர்கள்.

(4) இவ்வுலகத்திற் கொடியவினைகளைப் புரிந்து பாவங்களுக்குத் தண்டனையை யடைவதற்காக வமைக்கப்பட்டிருக்கும் நரகலோகத்திற்கு 'அதோ'மார்க்கமென்னும் நான்காவது வழியாகச் சென்று பின்னர் ஜனிக்கும் பாவிகள்.

இவர்களிலிரண்டாவது வகுப்பின் ஆன்மாக்களை வித்துவான்களென்று மவர்கள் சூரியமண்டலத்தின்வழியாகச் செல்வார்களென்று மோதியிருப்பதை இராமாயணத்திலும், மூன்றாவது வகுப்பின் ஆன்மாக்களைக் கர்மிடர்களென்று மிவர்கள் சந்திரமண்டலத்தின் வழியாகச் செல்வார்களென்றுங்கூறியிருப்பதை மகாபாரதத்திலும் இரகசியமாகமொழிந்திருப்பதை நாங்காணலாம், இக் கருத்துப்பற்றியே இராமாயணத்திற் புகழ்ப்பெற்ற அரச வம்சத்தைச் சூரியகுலத்தினரெனவும், மகாபாரதத்திற்புகழ்ப்பெற்ற அரச வம்சத்தைச்சந்திர குலத்தினரெனவுஞ் சங்கேதமாகப் புகன்றிருப்பதையறிக. மானிடப் பிறவிக்கு மனப்பக்குவத்துக்குத் தக்கவாறு தருமம் வழுவாது நடந்து சந்திரலோகமாகிய சுவர்க்கலோகத்திற் புகுந்து பரிமாணமுள்ள தேவபோகத்தை யநுபவிக்கவியற்றிய முறையாகிய அப்யுதய தர்மத்தை மகாபாரதத்திலும், ஆத்மஞ்ஞானியாய்ப் பிறவிக்கடலைக்கடந்து இனிப்பிறவாத பரமபதத்தைநல்கும் முறையாகிய நிச்சிரேயஸ தர்மத்தை இராமாயணத்திலும் விளக்கமாகக்காணலாகுமென்று புகலின் எவ்வித ஆதரவினாலக்கொள்கை ஆதரிக்கப்படுகின்றது? என்னும் வினாவிற்கு அடியில் வருமாறு மறுமொழி காண்க.

பாரத கதையின் நாயகர்களுக்குரிய ஸ்தானம் அஸ்தினாபுரி. அது சந்திரவம்சத்திற்பிறந்த அரசனாகிய ஸுஹோத்திரனுடைய புத்திரன் ஹஸ்தி யென்பவனாற் கட்டப்பட்ட பட்டினமென்று கதையின் வரலாறு. ஆயினும், அம்மொழியைப் பகுத்துப் பொருளாராயின் யானையாலமைந்த புரியென்று விளங்குகின்றது. புரியென்

னும் பதத்திற்கு உடல் என்பது பொருள். (ஶரீரேத்தே பாராஷ: என்னும் பதப்பொருளையுணர்க.) "யானை"யினுல் ஸ்தூலமான தன்மையைக்குறித்து அஸ்தினபுரமென்னுஞ்சொல் ஸ்தூலதேகமெனப் பொருள்கொள்ளல் பொருந்தும் ஸ்தூலதேகவாசியாகிய ஜீவாத்மா கர்மவலியினுல் "யே வை கே சாஸ்மால்லோகாத் ப்ரயாந்தி சந்த்ரமஸமேவ தே ஸர்வே கச்சந்தி" என்னும் வேதவசனப்படி சந்திரலோகமென்று உபலக்ஷணமாகக் கூறப்படும் சுவர்க்கலோகத்திலிருந்து "க்ருதாத்யயே அநுஶயவாந்" என்னும் விதிப்படி பின்னர் ஸ்தூலதேகத்தினுழைந்து ஜனிக்குந்தன்மையால் அந்த ஜீவாத்மாவைச் சந்திரனுடைய பரம்பரையில்வருமோரரசனுகக் கூறியிருக்கின்றனர். அவனைப்பற்றிய உபந்நியாசமாகிய விக்கிரந்தத்திற்குப் பாரதமென்னும் பெயர்வழங்கும். புதன்முதலாகவந்த சந்திரவம்சத்திய பலவரசர்களுக்குள் ளொருவனுகிய பரதனுடைய நாமத்தை முன்னிட்டு அவன் சந்ததியாருடைய சரித்திரத்தைப் பாரதமென்று வழங்கலாகுமெனல் சிலரது கொள்கை.

இங்குப் பாரதமென்னும் மொழி பரதனென்ற மொழிபற்றியமைந்தது அஃதாவது, பரதனைப்பற்றியதெனப் பொருள்படும். பரதன் என்ற சொல்லுக்கு நடி, நர்த்தகன், வேஷதாரியாய் நடிப்பவனெனப் பகப்பொருளாகும். நாடகசாலையி லரிச்சந்திரனுடைய வேஷத்தைப் புனைந்து நடிக்கின்ற தேவதத்தனென்பவன் புனைந்த வேஷத்துக்குத் தக்கவாறு அபிநயித்து நாடகசாலையிற் சுகதுக்கங்களை யநுபவிப்பவன்போல நடிக்கினும் உண்மையிற்றான் தேவதத்தனெனவும், அரிச்சந்திரனல்லனெனவும், வேஷத்தினிமித்தந் தான் கொண்டாடும் போகம்முதலியனவெல்லாந் தனக்குச் சம்பந்தமில்லையெனவும், அவ்வேஷமகன்ற பின்னர்த் தன்னியற்கையான நிலைமை வேறெனவும் இருவிதத்தாத்பரியமுள்ளவனுகவிருப்பதுபோலத் தேகியானவ னெல்லாச்சுகதுக்கங்களும் பிராரப்தரூபமாகிய சரீரத்தின் நிமித்தமேயல்லாது சரீரத்திற்கு வேருகிய தனக்குச்சம்பந்தமில்லை யெனவுந், தான் சரீரத்தினின்றும்வேறுபட்டவனெனவும், நன்றாகநடித்து வேதனம்பெறும் நர்த்தகன் அவ்வேதனத்தைத் தன்வீட்டுக்குக் கொண்டுபோய் உண்ணுமாறு தேகியானவன் தானிங்குக் கருமங்க

ளைப் புரிந்தவைகளின் பலனை யிச்சரீரமொழிந்தபின்னர்த் தன்னியற்கையான சூட்சுமரூபத்துடன் சுவர்க்கலோகத்திலுண்ணவேண்டுமெனவும் நடப்பானென்னுங் கருத்துடன் நர்த்தகனுடைய உவமை பற்றி ஜீவாத்மாவைப் பரதனெனவு மவனைப்பற்றிப் புகலுஞ் சரித்திரத்திற்குப் பாரதமெனவும் பொருள் கொள்ளல்வேண்டும்.

(இன்னும் வரும்.)

P. S. சுப்பிரமணிய ஐயர்.

உ

சிவமயம்.

சாவா வுடம்பு.

சாவாவுடம்பு—புகழுடம்பு. புகழ் செய்தார்க்குப் பூதவுடம் பிறக்கப் புகழுடம்பு நிற்றலின் அப்புகழுடம்பு சாவாவுடம்பெனப் பட்டது. எண்ணரிய பிறவிகளுளெய்தரிய மானுடப்பிறவியை யெய்தி நின்றாருள்ளுஞ் சதுரப்பாடுடையார்க்கன்றி யேனையோர்க்கவ்வுடம்பு பெறுதல் கூடாது. (சதுரப்பாடு-நாகரிகம்) அது,—

"நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது".

என்னுந் தேவர் வாக்கானறியப்படும்.

சதுரப்பாடுடையாரே இவ்வுடம்பினிலையாமையையறிந்து நிலையாகிய சாவாவுடம்பைத் தேடுதற்குரியராதலின், ஏனையோரால் அது கூடாதெனப்பட்டது. பாரதத்தில் வில்லிபுத்தூராரும் புகழுடம்பை அடைந்தவரே நீட்டித்திருப்பவரெனக்கூறினார். அது,—

"தேடினார் யாவ ரேனு மெழுவகை யானுஞ்சீர்த்தி
நீடினா ரவரே யென்பர் நீணிலத் துயர்ந்த மாந்தர்".

என்பதனானறியப்படும்.

"மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே."

என்று பிறருங்கூறுப.

கல்வியறிவொழுக்கங்களிற் றலைப்பட்டார் யாவரும்,

"கருவினி லழிவ தாயுங் கழிந்திடா தழிவ தாயும்
பரிணமித் தழிவ தாயும் பாலனா யழிவ தாயுந்
தருணனா யழிவ தாயுந் தானரைத் தழிவ தாயு
முருவமே யழிவே யானா லுள்ளபோ தேபா ருய்ய"

எனவும்,

"நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வ
நீரிற் சுருட்டு நெடுந் திரைக—ணீரி
லெழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

எனவுங் கூறியவாறுடம்பு செல்வ முதலியவற்றினிலையாமையையறிந்து தம்முடம்புஞ் செல்வமுமுள்ளபொழுதே தருமங்களை யியற்றிப் புகழுடம்பைபெய்தற்பாலர், அவ்வாறே யெய்தாது "யஶோ-ணஹீநா: பஶுஸ்ஸமாநா:" என்று கூறியவாறு மிருகங்களுக்கொப்பாகியிருக்குஞ் சாமானியரோடு தாமுமொருவராகவிருப்பதனாலவர்கட்காகும்பயன் யாதுமில்லை. பின் அவர் பெறும் பயன் வசையே. அது,—

"வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெச்சம் பெறாஅ விடின்".

என்பதனாலறியப்படும்.

சாவாவுடம்பையெய்திவாழாதவர் உயிர்வாழ்வாரல்லர். அவர் இறந்தவரே. அது,—

"வசை யொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்".

என்பதனாலறியப்படும்.

சாவாவுடம்பை இம்மையிற் பெற்றவர் மறுமையிற் புத்தேளுடம்பையுமெய்துவர். எனவே இருமைப்பயனையுமடைவர். அது,—

"நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு."

என்பதனானும்,

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான வூர்தி
யெய்துப வென்பதஞ் செய்வினை முடித்து"

என்பதனானும் அறியப்படும்.

சாவாவுடம்பு தருமத்தாலன்றி அருள், வீரம், கொடை, கல்வி முதலியவாற்றானும் பிறவாற்றானுமெய்தப்படும். அது,—

"மண்ணின்மேல் வான்புகழ் நட்டானு மாசில்சீர்ப்
பெண்ணுட் பெருந்தகையாட் பெற்றானு—முண்ணாநீர்க்
கூவல் குறைவின்றித் தொட்டானு மிம்மூவர்
சாவா வுடம்பெய் தினார்."

என்பதனாலறியப்படும்.

இச்செய்யுளில் வான்புகழென்றது அருள், வீரம், கொடை, கல்விமுதலியவற்றாலடையும் புகழை. கொடையுந் தருமத்துளொன்றாயினுஞ் சிறப்புப்பற்றி விதந்து கூறப்பட்டது.

முற்காலத்திலுங் கொடைமுதலியவற்றாற் சாவாவுடம்பையெய்தினாரும் பலருளர். அவர்களுள்,—

அருளாலெய்தினோர் சமயகுரவர் முதலாயினோர், வீரத்தாலெய்தினோர் இராமன் அருச்சுனன் முதலாயினோர்; கொடையாலெய்தினோர் மூவகை யெழுவள்ளல்கண் முதலாயினோர்; கல்வியாலெய்தினோர் முதலிடை கடைச் சங்கங்கள் நிறுவிய பாண்டியர்களும், அச் சங்கப் புலவர்களும், கச்சியப்பர், கம்பர் முதலிய நூலாசிரியர்களும், சேனாவரையர், பரிமேலழகர், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்களும் முதலாயினோர்.

தற்காலத்தும், சிலவாண்டுகளுக்குமுன்னர் நமது யாழ்ப்பாண நாட்டிலேயவதரித்துப் பல எட்டுப்புஸ்தகங்களை அச்சுப்புஸ்தகங்களாக்கியும், சைவவித்தியாசாலைகளை ஸ்தாபித்தும், பாலமாணாக்கர்களுக்குக் கல்வி கற்பித்தும், அநேக பிரசங்கங்கள் செய்தும், நமது சைவசமயத்தையும், தமிழ் மொழியையும் வளர்த்துப் பரகதியடைந்த ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களுஞ் சாவாவுடம்பென்னும் வான் புகழையெய்தினாரேயாவர்.

இப்பொழுதும், முச்சங்கவாயிலான் முத்தமிழ் புரந்த மெச்சு புகழ்ப்பாண்டியர்த மெச்சமென்றுரைக்கவு மிப்புவிமீதில் நந்தமிழ் மக்கள்செய்த நற்றவமெனவும் வந்தவதரித்து, நந்தமிழ்மொழியானது தனதருமையும் பெருமையும்போய்ப், படிப்பாருங் கேட்பாரும் பரிபாலிப்பாருமின்றிக் குறைவுறுந்தன்மை கண்டு, நந்தமிழ்மக்கள் நலம்பெற்றுய்யவோ ரொண்டமிழ்ப்புலவர் சங்கத்தைத் திருவாலவாயென்று செப்பு மதுரைமாநகரின்கண்ணே நிறீஇத், தாம் "குடிப்பிறப் புடுத்துப் பனுவல்சூடி - விழுப்பேரொழுக்கம் பூண்டு காமுறவாய்மைவாய்மடுத்து மாந்தித் தூய்மையிற் - காத லின்பத்துத் தூங்கித் தீதறு - நடுநிலை நெடுகர் வைகிவைகலு - மழுக்காறின்மை யவாவின் மையெனை - யிருபெருநிதியமு மொருதா மீட்டுந் - தோலா நாவின் மேலோர் பேரவை" யாகியவதனுடன் ஒருநாளன்றிப் பல நாளிருக்கைபெற்று அக்கிராசனராக விளங்கித் தொல்காப்பியனார் "எட்டுவகை நுதலிய அவையத்தானும்" எனக்கூறிய புறப்பொருட்டுறைக்கிலக்காகியும், தமிழ்ச்சங்க முத்திராசாலையென ஓர் அச்சியந்திரசாலையை வைத்து முகுந்தனுதவிய முந்தமிழ்தன்ன "செந்தமிழ்ப்" பத்திரிகையையுஞ் செந்நாப் புலவரின் செம்பொருளமைந்த பல்வகை விஷயங்களோடு வெளிவரச்செய்தும், பழைய பலநூலுரைகளைத் திருத்தியச்சிட்டு வெளிப்படுத்தியும், பாலர்கள் தமிழ்நூல்களைக்கற்றுத் தேறுமாறு சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையென்னும் பெயரோடு ஒரு வித்தியாசாலையைத் தாபனஞ்செய்தும், பழைய நூலுரைகளைத்திருத்தியும், புதிதாகவியற்றியும், அச்சிடும் புலவர்களுக்கும், தம்மேற் பாமாலைசூட்டும் புலவர்களுக்கும் ஒண்பொருளீந்து தொல்காப்பியனார் கூறிய "இடையில் வண்புகழ்க்கொடைமையானும்" என்னும் புறப்பொருட்டுறைக்கும் இலக்காகியுமிவ்வாறே பல்லாற்றானும் நந்தமிழ்நாட்டைப் பரிபாலித்துச்சிறப்புறச்செய்துவந்து சென்ற கார்த்திகைமீ ௨௯-ம் திகதியிலன்று பரகதியடைந்தவராகிய பாலவனத்தம் ஜமீந்தார் ஸ்ரீமாந். பொ. பாண்டித்துரைத் தேவரும் சாவாவுடம்பாகிய வான்புகழையெய்தினரேயாவர்.

ஆதலால், சாவாவுடம்பாகிய புகழுடம்பையடைதற்கு மேற்கூறிய மகான்களைப்போல நந்தமிழ்மக்கள் யாவரும் விரும்புவாரேயாயின் நந்தமிழ்நாடு மேலோங்குமென்பதற் கையமேயில்லை.

ஸ்ரீமாந், பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள் தேக வியோகத்தைக் குறித்துப்பாடிய கவிகள்.

வெண்பா.

முச்சங்கத் தாற்றமிழை முன்புரந்த பாண்டியர்த
மெச்சமெ(ன) வந்திங் கிறையருளா—லச்செடுத்த
பாண்டித் துரைத்தேவ பார்த்திபனு மில்லையென்று
வீண்டுத் தமிழ்புரப்பார் யார்.

கட்டளைக்கலித்துறை.

கோவாகி யங்கும் புலவோரைச் சங்கநீ கூட்டுதற்கோ
மூவா முதல்வன் றிருவால வாயுடை முன்னவன்ற
னேவா லினிய தமிழ்பரி பாலிக்க வெய்தியதோர்
தேவா புகலுதி யிச்சங்கம் விட்டுவிண் சென்றதுவே.

முந்தமிழ் தார்ந்திடத் தேவர்கட் கீந்த முகுந்தனென
நந்தமிழ் மக்களு நாவுண்டு தேக்கிட நன்கெடுத்த
செந்தமி ழீந்துநற் சங்கமு நாட்டிய தேவனைப்போற்
பைந்தமிழ் பாலிக்க வல்லவர் யாரினிப் பாருலகே.

ஆசிரியவிருத்தம்.

மேதகு புலவர் பாடும் விழுப்புக ழுடைய நீரார்
போதுவர் சுவர்க்க மென்று புகலுநூற் கிடக்கை தன்னு
லோதுறு பலபா மேவ லுற்றநீ துறக்கம் புக்கா
யேதமி றேவ ஞண்டு மீண்டுநீ தேவ ஞமே.

சி. கணேசையர்.

மதுரைத் தமிழ்ச்சங்கத் தங்கத்தினரும், மாணவர் செந்தமிழ்ச்சங்கத் தக்கிராசனாதிபதியும், மதுரைக் காலேஜ் தமிழ்ப்பண்டிதரும் வியாச போதகருமாகிய,

ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் பாடியவை.

மதுரமுறுந் தமிழ்ப்பயிரை மாண்புறுசை
வப்பயிரை வளர்க்கு மேலா
மதிபுகழ்சேர் பெருமுகிலே யன்புறு
பாண்டித்துரையா மதிப ரேறே
புதுவைநகர் புனைபொன்னுச்சாமி யெழிற்
பூபன்மகிழ் புதல்வ னாகிப்
பதியிலுயர் தென்பாண்டிப் பாலவனத்
தப்பதியைப் பாலித்தோனே. (௧)

உலகமெலா மீன்றளித்த வுமையவட்கோ
ருயிர்த்துணையா வுவந்து வந்து
நிலவுமதி நெடுமரபின் றவம்விளங்க
நீண்மகுட நேர்ந்து சூடிப்
பலவுயிரு மின்பமுறப் பனிக்கவிகை
தனைநிழற்றிப் பண்பார் செங்கோ
லிலகுறுநற் கரத்தேந்து மிறைவனுறை
யெழில்பெற்ற தால வாயே. (௨)

அவ்விறையு மார்வமுட னுய்தமிழ்ச்சங்
கம்மிருந்த வவ்வூ ரின்க
ணெவ்வமறு செவ்விபெறு சங்கமிலா
விருங்குறையொன் றென்று நீங்கத்
திவ்ய நான்காஞ்சங்க நிறுவியதைத்
திகழ்விக்குஞ் சிறப்பு வாய்ந்தோ
யிவ்வுலகு நீத்தகன்ற தென்னேயா
னன்கறிய விசைத் திடாயே. (௩)

இளமையிற்செந் தமிழ்சைவ சித்தாந்த
மாதியெலா மினிது தேர்ந்து
வளமைமிகு கம்பரா மாயணநுட்
பங்களெலாம் வயதீ ரேழிற்
றெளிவுபெறப் பலர்மகிழப் பிரசங்கஞ்
செய்திடுநற் றிறமை வாய்ந்து
"விளையுமிரி னியன்முளையில் விளங்கு"மென
முதுமொழியை மெய்ப்பித் தாயே. (௪)

அனந்தாழ்வா னெனுந்திருப்பே ரமைந்தொளிர்
முத்துச்சாமி ஐயங்கார் பால்
முனந்தமிழைக் கற்றுணர்ந்த முறையினையோர்ந்
தன்னவன்றன் மொய்ம்பார் மைந்தன்
றினந்திகழ வவற்காசா னுயவனைச்
'செந்தமிழா' சிரிய னாக்கிக்
கனந்திகழச் செய்துகுருக் கடன்றீர்த்தாய்
நின்போல்வார்க் கண்டிலேமே. (௫)

தவமலிநன் மதுரையில் ஹைகோர்ட்வக்கீ
லாய்நினது தமிழ்ச்சங் கத்தை
உவகையொடு நனிநடத்து முயர்
சீனிவாசனென வோது மேலோ
னவனிபுகழ் முகவையிலு மணிதிகழெட்
டயபுரத்து மார்சம்ஸ் தானக்
கவிஞர்கண் மு. ராகவையங் கார்
வீராசாமியையங் காரின் னோர்கள். (௬)

அன்பாரு நின்னிடம்வண் டமிழ்பயின்றோ
ரெனவறிந்தே னையா வின்னு
நின்பார்வைக் கருணையினன் னிலையுற்றோர்
தொகையாரே நிகழ்த்த வல்லா
ரென்போல்வா ரெண்ணியநல் லெண்ணமெலா
மினிதுநிறை வேற்று விக்கும்

பொன்போலுங் குணமுடையாய் பொருவில்
பாண்டித் துரையாம் புலவரேறே. (எ)

"இருவேறிவ் வுலகத்தி னியற்கை" யிவை
யொன்றேடொன் றியைபி லாத
"திருவேறு தெள்ளியரா தலும்வே" றென்
றன்றுரைத்த தேவர் வாக்கிற்
கொருவேறு புறனடையா யுற்றதொடு
மீகையரு ளொழுக்க மாதிப்
பெருவேறு தன்மையொடும் பிறங்கிய
பாண்டித்துரையாம் பெற்றியோனே. (அ)

செருக்காருந் தருக்கசங் கிரகமன்னம்
பட்டீயஞ் செய்ப கல்விப்
பெருக்காளர் பேணுதிருக் குறள்பரிமே
லழகருரை பெருமை வாய்ந்த
திருக்கோவை யார்பேரா சிரியருரை
சிர்ச்சேதுத் திருப்பு ராணம்
விருப்பாலே யாறுமுகநாவலற் கொண்
டுன்னையன் வெளியிட்டாற் போல். (கூ)

தகுபெரும்பே ராசிரியன் சாமிநாதையன்
முதற் றக்கோர்க் கொண்டு
புகழ்மணிமே கலையுரைநற் புறப்பொருள்வெண்
பாமாலை புனித வாய்மை
மிகுசிவஞா னச்சாமி பிரபந்தத்
திரட்டாதி வெளியிட் டேநீ
"மகனறிவு தந்தையறி" வெனுமொழிக்கோ
ரிலக்காணுய் மற்றிம் மட்டோ. (கo)

உந்தை பொன்னுச் சாமியிறை
சந்திரசேகரக்கவிஞ னுதவியான் முன்
சிந்தைமகிழ் வொடுதனிப்பா டற்றிரட்டோன்
றேதொகுத்தான் செல்வ னுநீ

செந்தமிழ்ப்பன் னூற்றிரட்டுந் திகழ்சைவ
மஞ்சரியுந் திரட்டித் தந்து
" தந்தையினுஞ் சதமடங்கு தனய"னெனத்
தகுமொழியைத் தாபித் தாயே. (கக)

மதுரைமுக வையிற்பஜனை மடநிறுவி
யுயர்சென்னை மாவா ழாரூர்
நிதிமிகுசே லந்திருச்சி நாகைபுலி
யூர்தஞ்சை நெல்லை யாதி
கதிதருமூர் களிற்பிரசங் *கம் பொழிந்தாற்
போற்பிரசங் கங்கள் செய்து
துதிபெறுசெந் தமிழ்சைவ நனிதழையச்
செப்பாண்டித் துரைப்பூ மானே. (கஉ)

மதுரையிற்கூ டியசென்னை மாகாணக்
கூட்டநனி வயங்க மிக்க
நிதியுதவி யதன்வரவேற் புச்சபையின்
றலைமையினை நீயே பூண்டாய்
முதுமதுரைக் கல்லூரிக் குதவிநிதி
யதைநடத்தி முகவை யென்னும்
பதியினிற்பாண் டியன்லோயர் ஸெகண்டரிவித்
தியாசாலை பாலித் தாயே. (கங)

எனதருமை மாணவர்சேந் தமிழ்ச்சங்கப்
போஷகரி லிலங்கி நின்று
தனமுதவி யதனச்சி னார்க்கினியர்
நூனிலையந் தழைக்கச் செய்தா
யினிய " தமிழ் மொழிவரலா" " றிரவியரிப்
புலவ"னரங் கேற்றுங் காலும்
பினும்விரும்புந் தொறுமவைக்குத் தலைமைவகித்
தெனைப்பெருமை பெறச்செய்தாயே. (கச)

---

* கம் - மேகம்.

உக்கிரபாண் டியன்காலந் தென்மதுரைத்
தமிழ்ச்சங்க மொழிந்த தென்னா
மிக்கவசை யறவொழித்தாய் மேன்மைமிகு
சங்கமொன்றவ் வியன்மூ தூரி
லுக்கிரபாண் டியன்கால முதித்தோங்கி
யொளிர்ந்ததென வுலகு போற்றத்
தக்கதுதி பெற்றுயர்ந்தாய் தனியெழிற்
பாண்டித்துரையாந் தமிழ்க்கோ மானே. (௧௫)

பன்னரிய மாணவர்க்குச் சம்பளமும்
பரீக்ஷைக்குப் பணமு மீந்தாய்
மன்னுமறை யோர்பலர்க்கு மணமுடித்தாய்
வீடளித்தாய் மற்று மன்போ
டன்னமிலார்க் கன்னமுநல் லாடையிலார்க்
காடையுந்தந் தாதரித்தா
யின்னினநீ செய்ததென வெடுத்துரைக்க
விவ்வுலகி லெவர்வல் லாரே. (௧௬)

நற்றமிழ்சை வப்பயிர்கை யற்றவர்கள்
கற்றவர்க ணலிந்து வாடச்
செற்றமறு நிற்குரிய பொற்புடைய
கற்புடையோர் திகைத் திரங்கச்
சுற்றமுநட் புற்றவரும் பற்றலரு
மற்றெவருஞ் சோகங் கூரக்
குற்றமறு பெற்றியுறு கொற்றவவெங்
குற்றனைநீ கூறாய் கூறாய். (௧௭)

“இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ”
ரிவர்வகுத்த ‘வினிமை யார்ந்த
திருமொழி’யை நன்குணர்ந்தோ மாதலினாற்
பின்னுமுள ‘திருத்த முற்ற
வொருமொழி’யு மவர்பாலே யுற்றுணர்வோ
மெனநீவிண் ணுற்றாய் கொல்லோ

பெருமொழிசேர் தருவனையாய் பேசுதி
பாண்டித்துரையாம் பெருமை யோனே. (கஅ)
ஏற்றமிகு தாய்தந்தை யெழின்மருக
ஞாதியர்பா லேகி னையோ?
போற்றுவிவே கானந்தன் றனையனுப்பி
வேதாந்தப் பொருளை யெல்லாம்
மேற்றிசையோர் தமக்குதவு பாற்கரனைக்
காண்பானீ விரைந்தாய் கொல்லோ?
வேற்றுமையின் மெய்ந்நண்பன் வீர. லே.
சிந்நயன்பானீ மேவி னையோ. (கக)

வேண்டுமள வாங்கிலமு மேற்கலையுங்
கற்றுணர்ந்தாய் மேனாட் டாருங்
காண்டகுபல் ஜாலவகை கைதேர்ந்தாய்
கற்பமெனுங் காலம் வாழ
வீண்டரிய ஜாலமொன்று பயின்றிலையே
யிதுபயில வேதா னேவிவ்
வாண்டினிற்கார்த் திகைமதியிற் பதினேழா
நாட்சென்று யறைகு வாயே. (உ0)

பெருமகனே மருவுபுகழ் மங்களசாமித்தேவப்
பேரா ளன்றன்
மருமகனே வண்டமிழ்நூல் வல்லோர்க்கும்
வறிஞருக்கு மாரி போன்று
தருமகனே யன்பொருரு வாயமர்
பாண்டித்துரையாந் தயைமிக் கோனே
யொருமகனே யுனக்குளனு லவன்பொருட்டா
யினுநீயிங் குற்றி டாயோ. (உக)

உவந்திந்தத் தமிழுலகு முயர்முதுநற்
குரவர்களு முனுற்று மேலாந்
தவந்தந்த கான்முளையே தன்னிகர்
பாண்டித்துரையாந் தரும வானே

நவந்தந்த நற்குண "வின் னுசெய்தார்
நாணிடநன் னயமே செய்"வோய்
கவின்றந்த நின்முகத்தை யாங்காண
வொருமுறைநீ காட்டாய் காட்டாய். (உஉ)

கதுமெனநற் றமிழ்விரும்புங் கனதனமு
வீர்தமிழ்ச் சங்கத்திற் கான
நிதிதருமி னெனவெழுதி நிருபமனுப்
பினையெங்க ணிருப ரேறே
யிதுநிகழ்சின் னாட்கெல்லா மிகநீங்கிப்
பரமுற்ற தென்னோ நின்ற
னெதிர்வறியுந் திறமையையென் னென்பாம்
பாண் டித்துரையா மிசைக்கோ மானே. (உங)

பொய்யாதமொ ழிப்புலவன் புகன்றுஞ்சாட்
சியந்தந்தும் புகழ்மா றன்முன்
செய்யாத தென்மதுரைத் தமிழ்ச்சங்கத்
தாபன நீ செய்தாய் மெய்யா
ரையா நான் 'மறைகளினிந் தனைசைவ
நிந்தனைக' ளாற்று நெஞ்சத்
துய்யா நின் னல்லிசையுஞ் சங்கமும்பல்
லூழிநனி துலங்கி வாழி. (உச)

உக்கிரபாண் டியன்சோம சுந்தரபாண்
டியன்மகனு யுதித்தா னென்பர்
"தக்கதந்தை யேபுதல்வ னுவ"னெனும்
வேதமொழி சரத மாக
வுக்கிரபாண் டியன்சோம சுந்தரபாண்
டியற்றந்த வுண்மை யோர்ந்தே
மிக்குவல யத்திலவன் சந்ததியென்
றென்றுநனி யிலகி வாழி. (உரு)

வே. முத்துச்சாமி ஐயர், பி. ஏ., எல். டி., அவர்கள் பாடியவை.

சீர்பூத்ததிருமறைகள்சென்றெங்குந்தேடியுந்தாந்தெரியக்காணாக் [தே
கார்பூத்தமிடற்றோனுங்கலைநலங்கூட்டுணும்விருப்பாற்கழகஞ்சார்ந்
யேர்பூத்தவிளந்தமிழினின்சுவையையினிதுணர்ந்தேயிறையனாராய்ப்
பேர்பூத்துப்பிறங்கியதென்மதுரைநகரிஞ்ஞான்றும்பெருமையேற. ()

முன்பாண்டித்துரைப்பெரியோர்முச்சங்க நாட்டினரம்மொழிமா
றாதெம், மன்பாண்டித்துரைப்பெரியோய்மன்னுதமிழ்மொழிமீதுவ
ரம்பிலாத, வன்பாண்டவகத்தோடுமருந்தமிழின்சங்கநிறாஉமண்ண
லேயாந், துன்பாண்டநெஞ்சினராய்த்துடிதுடிக்கவெங்குற்றாய்சொல்
லுவாயே. (௨)

ஊருணியும்பயன்மரமுமுண்ணீருங்கனிகளுமேயுதவமுன்போற்
பேருணவுமாடைகளும்பெரும்பரிசுந்தந்திடுமோபேசுங்காணீ
சீரணவுமதுரையிலோர்செய்யுடையவறிஞனைத்திருத்துமாறு
பேரணவுதமிழ்ச்சங்கந்திருத்திவளர்த்தனைமறத்தல்பிழையேயையா.

தந்தையாந்தமிழ்வேந்தர்பொன்னுச்சாமித்தேவர்தவத்தாலன்றி
விந்தையாய்த்தமிழுலகமேனாளிற்செய்தவத்தின்விளைவாய்த்தோன்
றிச், சிந்தையினிற்சிவனேசஞ்செழுங்கொடைசெந்தமிழ்போற்றல்
சிறக்கச்சேர்ந்தே, தந்தையினிற்சதகுணமாமைந்தனெனத்தகுமொழி
யைத்தாபித்தாயே. (௪)

நண்ணரியகல்விபொறைநடுநிலைமுதலாயநலங்களார்ந்த
வெண்ணரியபெரும்புலவர்க்கிவணிறுவுசங்கத்தினியல்பையெய்ப்ப
விண்ணுறையும்வெறும்புலவர்தமக்குமொருசங்கநிறாஉம்விருப்போ
வன்றிப், பண்ணுறையுஞ்சொல்லாளன்பாற்கரபூபனைக்காணும்பரிவோ
சென்றாய். (௫)

மன்னரியல்முழுதுணருமண்டலேசுரன் ஜார்ஜ்மன்னர்மன்ன
னன்னரியமுழங்கிடநந்நாடெய்திமுடிசூடுநற்காலத்திற்

பன்னரியதிருமகளும்பார்மகளுநாமகளும்பரிந்துசேரு
முன்னரியவுயர்குணத்தோயுனைப்பிரிதறமிழ்மக்களுமேபோலும். ()

வேண்பா.

வேண்டிற்றுரைசெயுமுன்வேண்டறிஞர்க்கீந்துவந்த
பாண்டித்துரைவிண்படர்ந்தனனே—பூண்டபுகழ்
யாண்டித்துரைக்குநிகர்யாங்காணப்போகின்றோ
மீண்டித்தரையிலினி. (எ)

சேலம் செவ்வாய்ப்பேட்டைத் தமிழ்மாணாக்கர்

சுப்பராய செட்டியார் பாடியவை.

எந்நூலு மெளிதுணர்ந்தா யிந்நாளிலென்பதற்கிங் கினிதினீதான், றென்னூலுளாழ்பொருள்களனைத் தினையுந்திரட்டியொருதொகுப்பாற்றந்த, பன்னூலின்றிரட்டெனுமோர்பயனளிக்குநூலொன்றே சான்றும்பாரே, யிந்நாளிலுனையிழந்தேமுக்கிரபாண்டித்துரையேயென்செய்கேமே. (க)

நறையொழுகத்தமிழ்பருகுந்திருவாயாய்கனிந்தசொல்லாய்நாவலோர்தங், குறையொழுகத்தருகரத்தாய்மதுரையிற்சங்கத்தரசேகுலவுந்திங்கட், பிறைநழுவப்புனலொழுகச்சடையாடப்பொதுவினடம்பிறங்கச்செய்யு, மிறைகழற்கோவினிதடைந்தாயரைநாளிற்றவம்பலித்தாலிகழ்வார்யாரே. (உ)

ஓயாதபுகழ்ப்பாண்டித்துரையேமுன்சேலநகர்க்கொருநாள்வந்து
வீயாதபிரசங்கப்பெருமழையினூடுதிர்ந்தவியன்சொலொன்றீன்
டாயாததமிழெல்லாமாய்ந்துணர்ந்தேனிதுகாறுமறிந்ததொன்றே
நேயாரேதமிழறியேனென்பதுவேயென்றதென்றனினைப்பினுண்டே.

விண்ணமங்கலம்

மூ. தண்டாயுதபாணிக்காடவராயரவர்கள் பாடியவை.

மண்ணாட்டிற்புலவரெலாமலைக்கவரும்பிரசங்கமாரிபெய்து
விண்ணாட்டிற்புலவரெலாம்விழியிமையா திருக்கவந்தவேந்தாமிந்த்ரன்
கண்ணாட்டிச்செவிகொடுத்துமனங்களிப்பச்சொன்மாரிகடுகிப்பெய்யப்
பண்ணாட்டுமொழிப்பாண்டித் துரைக்கொண்டல்சென்றதுநம் பாவம்
பாவம். (க)

காற்றிரட்டத்திரைபுரட்டுங்கடலினையச்சுராசுரராற்கடைந்தேபண்டு
மாற்றிரட்டுமமுதுதமிழ்மாக்கடலினீயெடுத்துவழங்குஞ்சீர்ப்பன்
னூற்றிரட்டுக்கிணையாமோநவல்சைவமஞ்சரியைநோக்குங்காலைப்
பாற்றிரட்டுங்கைத்திடுமேபார்வேந்தேசென்றவிடம்பகரொணாதே.

பண்டிருந்தபாண்டியர்நற்குணமோடுபேரறிவும்பாங்காய்க்கூடிக்
கொண்டிருந்தவடிவோனேதமிழ்ப்பாண்டித்துரைத்தேவேகோதிலாத
வண்டிருந்ததார்மார்பாவெமைவிடுத்துமாகரொடுவறியச்சென்றாய்
கண்டிருந்ததேமொழியாய்தேவரெனுங்குலச்சார்பேகணித்தாய்கொ
[ல்லோ. (உ)

தாரமங்கலம்

அனவரத நஞ்சைய பிள்ளையவர்கள் பாடியவை.

மகிழ்வுபெறத்தமிழணங்கைக்கனிவினொடுபுறங்காத்தவமுதிகூடற்
றிகழவுயர்முச்சங்கநான்காக்கிப்புலவர்கல்வித்திறமைநோக்கித்
துகளறவேபொன்பொழியுங்கரதலப்பாண்டித்துரையேதூயபாரிற்
புகழுடம்புநிறுவியபின்பூதவுடன்மிகையெனவிண்போந்தாய்கொல்
[லோ.

இமிழ்திரைசூழ்ஞாலத்துப்பன்மொழியுந்தனக்குநிகரின்மைகாட்டுந்
தமிழ்பயின்றசுவையனைத்துமுண்டுகண்டாயிவட்புலவர்தம்மைக்கூடி
கமழ்நறுந்தேன்பாகுகண்டசர்க்கரைமுக்கனிபானேர்காணுவானி [க்
னமிழ்தயின்றப்புலவருடன்கூடியொப்புக்காணவிழைந்தாங்குற்றாயோ

அந்தோகோதமிழ்மானின்பிரிவாற்றாளாவலிப்பவவளைப்போற்றி
வந்தோனேகைவிடினம்பிழைப்பென்றாமெனப்புலவர்மனம்புண்ணாக
நொந்தேகநீநிறுவுஞ்சங்கஞ்சார்பறுங்கொடிபோனுடங்கிவாடச் [னோ
சுந்தரபாண்டித்துரையேயியற்கையருட்குணந்துறந்தசூட்சியென்

கலைகொடுக்குமதிநிரம்பவளர்வுற்றாய்தமிழ்த்தாயின்கதிகண்டேங்கி[த்
முலைகொடுக்குந்தாயெனமுன்வந்துசங்கப்பாலூட்டிமுயன்றுபேணி
தலைகொடுத்துத்தாங்கியிருகரங்கொடுத்தாதரித்தனையாற்சாமியென்
றும், விலைகொடுத்துமுயிர்மீட்பாய்க்குயிர்கொடுத்துமீட்காதவெறி
யெம்யாமே. (௬)

நீர்சொரியாக்கண்ணில்லையழன்மெழுகாயுருகாதநெஞ்சமில்லை,பேர்
தெரியாப்புலவரில்லையாவலிக்காவாயுமில்லைபெரிதுன்சீர்த்தி,நேர்பெறு
முன்வயதுகொஞ்சந்தமிழ்க்குதவநினைந்ததெலாம்நேராமுன்னே, சீர்
பெறுமித்தமிழகத்தையழகழித்தகொடுவிதிக்கென்செய்தேமையா. ()

ஆரொருவரினித்தமிழினாழந்தேர்ந்தானந்தமடைவாருன்போல்
ஆரொருவர்தமிழென்னும்பிச்சியைக்கண்டாதரிப்பாரருமைகண்டே
ஆரொருவர்பொன்வாரியாசையொடும்பொழிகுவர்பின்னவைக்கண்மு
ன்னிட்,டாரொருவர்பிரசங்கத்தேன்மாரிபொழிந்தின்பமளிப்பாரையா

உக்கிரபாண்டியனுள்ளான்றமிழ்நாட்டிலெனக்கேள்வியுற்றான்போ
லுந், திக்கெனமுன்முடிமீதுவளையெறிந்தான்மீண்டுவந்தென்செய்வா
னோவென், றிக்கணமேங்கியவிந்த்ரன்றனைப்பரிவாலஞ்சலெனவிசைத்
தளிப்பான், புக்கனைபோன்மினித்திரும்புநன்னாளெப்பொழுதுரைப்
பாய்புலவர்வாழ்வே. (௭)

ஆங்கிலங்கற்றிடுஞ்சிறுவர்தாய்மொழியினபிமானமடையாக்கேடு,
நீங்கவொருபரீக்ஷைவைத்துப்பரிசீந்தாய்வானகத்துநிலவுந்தேவர்க்,கா
ங்குமொருபரீக்ஷைவைத்துத்தமிழ்ச்சுவையூட்டிடவசதியறியத்தானோ
ஓங்குபுகழ்மேவியபாண்டித்துரையேநீவான்சென்றுற்றதென்னோ.(௮)

மதுரைத்தமிழ்ச்சங்கம் எழுத்தாளரும், சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையிற் கல்விபயின்றவருமாகிய பிரவேசபண்டிதர்

கோ. செல்லயைங்கார் பாடியவை.

ஒப்பறுமுதல்வனுகியவுன்றனெண்முகப்பங்கயநோக்கந்
திப்பியமாகவிளங்குநாளென்றேதெரிவுறவேணவாவுறினு [மோ
மெய்ப்பொழுதினிநான்காண்குவனென்றனேக்கமுமொழிந்தபாடுறு
செப்பரும்புகழ்கொள்செந்தமிழ்வளர்த்தசெல்வபாண்டித்துரைக்கோ
வே. (க)

சுந்தரமிகுந்தசுரபியையகன்றகன்றுபோற்றுயருறுமெங்கள் [கே
புந்தியூறமுதேபொலிவுறுமணியேபொங்குமாக்கருணைவான்பெருக்
கந்தனைநிகர்பாண்டித்துரைவேந்தேகங்கைசேர்சிவனருள்பெற்றே
யந்தாவானத்தமரருக்கரசாயடைந்தனையிந்திரனிகர்த்தே. (உ)

திருந்தியசைவசாத்திரமோர்ந்துதேர்ந்தபாண்டித்துரைமன்னன்
பொருந்தியகல்விச்சபையிடைப்புகுந்துபுலவர்கள்மகிழ்வுறமொழிந்து
பெருந்தகையாகியிரப்பவருவப்பப்பெருங்கொடையளித்தருள்புரிந்து
வருந்தினனதனுற்கற்பகநீழல்வதியவானுலகடைந்தனனே. (ங)

வேறு.

இனியாருன்போற்றமிழ்வளர்ப்பாரெழிலார்பாண்டித்துரைக்கோவே
கனிவாய்க்கல்விபயில்கிற்பான்கருதும்பொருளையுபகரித்து
நனிதேர்ச்சியுறுமாணவர்க்குநலங்கூர்பரிசுநயந்தளித்துத்
தனியேசென்றுவானடைந்தாய்தரைமீதியாங்கள்தளர்ந்திடவே. (ச)

பாண்டித்துரையேபாரரசேபாரிலெவருமேன்மைபெற
வேண்டித்தருவாத்தமிழ்ச்சங்கம்விளங்கவைத்ததூயோனே
மீண்டித்தமிழைவளர்ப்பதற்குமேலாயோர்ந்துபொருள்கொணரப்
பூண்டவன்பாற்பொன்னுலகுபோந்தாய்போலுமெங்கோவே. (ரு)

பறக்கை

தா. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள் பாடியவை.

நேரிசை ஆசிரியப்பா.

சீர்பெறுசெந்தமிழ்சிறப்புற்றோங்கப்
பார்புகழ்மதுரைப்பதியினிற்பதித்த
சங்கப்பெருமைதரணியோர்போற்ற
வெங்கும்பரவிபியங்குமதனுன்
மதியிற்சிறந்துமாண்பொருளுணர்ந்து
பொதியவரையிற்பொருந்தியபுகழோ
னென்னவிருந்தீண்டியற்றமிழ்விளக்கினை
நன்னயமொழியிலாநாயினுங்கடையா
மென்போலியர்களெவரையுமெளிதிற்
றன்போலுயர்த்தத்தழைத்திடுமன்பு
திரையுடைவாரிசிறிதெனும்படிவளர்
துரையேபாண்டித்துரையுனையிழந்த
வாற்றுதவில்லாவரும்பிணி
மாற்றுதற்கொன்றுமருந்தறிந்திலனே.

சிவகாசி

கந்தசாமிக்கவிராயரவர்கள் பாடியவை.

புண்ணியமேயோருருவாயவதரித்திப்புவியனைத்தும்புகழ்ந்துவாழ்த்துங், கண்ணியஞ்சேர்முகவைநகர்நற்பாண்டித்துரையெனுமெங்கருணைக்கோவே, விண்ணினுயர்பொன்மணியேதமிழ்வளர்க்கும்பெருமானேமேலோயிந்த, மண்ணிலெலமைப்பரிதவிக்கும்படிக்கிருத்தியெங்கொளித்தாய்வழுத்தாயந்தோ. (க)

புவியதனிலுயர்மதுரைப்பதியினினற்றமிழ்ச்சங்கம்புதிதாய்த்தாபித்
தவிர்மணியாயக்கிராசனுதிபதியாயிருந்தாதரித்தாய்சர்வ
பவிசுடையாயின்னுமதுமேன்மேலும்வளரவெனப்பரமன்றுளிற் [னே.
றவமிகவும்புரிவதற்கோசென்றனைபாண்டித்துரைநற்றமிழ்வல்லோ

பெற்றதாய்தந்தையொடும்பிறங்குசகோதரர்கள்பெண்டீர்பிள்ளை யின்னுஞ், சுற்றமொடுபிரியமுயர்மித்திரர்நன்மனைபூமிதுகளில்செல் வம், மற்றெவையுமொருசமயமறந்திடலாமுனதருமைமறக்கொணு தே, கற்றவர்தேடிடுமுகவையுக்கிரபாண்டித்துரையெங்கருணைக்கோ வே. (ரு)

ஸ்ரீமாந்-பாண்டித்துரைத் தேவரவர்கள் பூஜைமடம் அணுக்கத்

தொண்டரும் அவர்கள் மாணக்கருள் ஒருவருமாகிய,

சிவஞானம் பிள்ளை பாடியவை.

சிறியா ரினத்தைச் சேர்வதுதான்
தீங்கு விளைக்கு மென்பதனை
யறியாப் பருவத் தெனைவலிந்தாண்
டறியும் படிக்கு நன்குணர்த்தி
நெறியா ரொழுக்கிற் றலைசிறந்தோர்
நேர்மை தனையுந் தெரிவித்த
வறிவா பாண்டித் துரைவள்ளா
லடியேன் றுயர மளப்பரிதே. (க)

பெற்றபிதா வினையிளமைப் பருவத்தே
யிழந்துநின்றன் பிறங்கு தாளை
யுற்றதுணை யாய்க்கொண்டென் னுடலுயிரா
தியவெல்லா முனக்கே தந்தேன்
கொற்றவர்கள் குலவிளக்கா முக்கிரபாண்
டித்துரையெங் குணசீ மானே
மற்றவரை யிரந்தறியா மதியிலியைக்
கைவிடுதன் மரபோ வையா. (உ)

சேவார்ந்த கொடியண்ண றிருவடியே
பொருளாகச் சிந்தித் தென்றுந்

170

தாவாத தமிழ்மொழியுஞ் சைவநெறி
யும்வளர்த்த தன்மை யாலே
மூவாத தமிழ்மறைசொன் மூவரோ
வாசகஞ்சொன் முனியோ வென்னப்
பாவாணர் புகழ்பாண்டித் துரையரசே
நினைப்பிரியும் பவந்தா னென்னே. (ங)

வேறு.

பேயோ டேனும் பிரிதலரி
தென்றுபெரியோர் பேசு முறை
நீயே யுணர்ந்து மெனையகன்ற
நிலைமை யென்னோ பெருநூல்க
ளோயா துணர்வார்க் குறுதுணையே
யுரைசால் பாண்டித் துரையரசே
தாயே யனைய சாமியுனைத்
தணந்த துயரஞ் சகிப்பேனோ. (ச)

வேறு.

அவஞான மகற்றுமுயர் சிவஞான
பாடியத்தை யகத்துட் கொண்டு
பவஞான மறமாற்றும் பண்பார்பாண்
டித்துரையே பார்மீ தென்றுந்
தவமேதுஞ் செய்யாத தாழ்வுடையே
னீடேறுந் தன்மை நோக்கிச்
சிவஞான மெனவழைக்குந் திருவாக்கைக்
கேளாது திகைக்கின் றேனே. (ரு)

அந்தகனூர் தம்வாதை யகற்றியுயர்
வீடளிப்ப தறிந்தே யென்னைச்
சொந்தவடி யானென்று சிந்தையினிற்
கொண்டதனைத் துலங்கக் கூறிப்
பந்தமறச் செய்திருப்பா சுரமதனை

யோதிமிகப் பரிவாய் நீறு
தந்திடுதி யெனச்சொல்பாண் டித்துரைநீ
பிரிந்ததுயர் சாற்றப் போமோ. (சா)

மந்திரமே நீறென்று வாழ்த்துதிருப்
பாசுரமும் வானோர் வேண்டக்
கந்தரத்திற் கறையுடையார் பெயருறுநற்
பதிகமொடு கழறிச் சோம
சுந்தரனைத் தொழுதுதிரு நீறுகொடு
வாவென்று சொன்ன வாக்கா
லிந்தவுல கினிற்பிறிதொன் றியம்பாது
மறைந்தனையே யெந்தா யெந்தாய். (எ)

ஒன்னலருந் தம்பிழையை யோராது
நினையடைந்தா லொருவா தேற்று
நன்னலங்கள் செய்விக்கு நவைதீர்பாண்
டித்துரைநின் னளின பாதப்
பொன்மலரே புகலென்று மற்றவரை
நச்சாத புந்தி யேனை
யின்னலுறச் செய்தகல்வ துன்பெருமைக்
கழகாமோ விசைத்தி டாயே. (அ)

பரமனடி பிரியாத பதம்பெறுபாண்
டித்துரையே பாவி யேன்றன்
சிரமமதை யகற்றியுநற் கல்வியொடு
செல்வநலஞ் செய்தே யாருந்
தரமுடையா னெனமிகவு நன்கறியச்
செய்திடுநற் சாமிக்கே நான்
சரமகவி பாடுதற்குத் தலைப்பட்டேன்
கொடும்பாவஞ் சாற்றொ ணாதே. (கூ)

ஸ்ரீ:

கடவுள் துணை.

மாட்சிமை தங்கிய, ஐந்தாவது

ஜியார்ஜ் சக்கரவர்த்தி யவர்களின் வைபவம்.

பண்டிதர், P. R. கிருஷ்ணமாசாரியராலியற்றப்பட்டு

மதுரையில் நடந்த பட்டாபிஷேக மஹோத்சவ தர்பாரில்

வாசிக்கப் பெற்றது.

காப்பு.

சோதியின் மிகுந்த சுடர்மணி மகுடம்
சூடி மன் னுயிர்களை யெல்லாம்
சாதியும் மதமும் நிறமுமெண் ணுமற்
றண்ணிய வொருகுடை நிழற்கீழ்
நீதியிற் புரக்கும் ஜியார்ஜ்எனும் நமது
நிருபர்கோன் புகழ்க்கதை நிகழ்த்த
ஆதியும் நடுவும் அந்தமு மகன்ற
அவன்மல ரடிகள்போற் றுதுமே.

புவிகளிற் சிறந்த பொருளெலாம் பொருந்திப்
போகங்க ளனைத்திற்கு மிடனுய்க்
குவிகளிற் செல்வந் தரும்புகைக் கலங்கள்
கோடியிற் குலவுறக் கொண்டு
செவிகளிற் கேட்கும் தேவர்தம் நகரச்
சிறப்பெலாம் நிதர்சன மாக்கிக்
கவிகளிற் புகலுங் கற்பனைக் கடங்காக்
கவினது லண்டன்மா நகரம். (க)

அந்தமா நகரி லரிமணிப் பீடத்
தழிவழ கருளெல்லா முருவாய்த்

தந்தமா நிறத்துக் கலைமக ளெனவும்
சரோருகத் தையலே யெனவும்
விந்தமா மலைவாழ் விமலையே யெனவும்
வியக்கவீற் றிருந்தருள் சுரந்தே
இந்தமா நிலங்க ளனைத்தையும் புரந்த
ஏந்திழைக் கரசையா ரறியார். (உ)

வெற்றியை யடைந்து விஜயலக் குமியாய்
விக்டோரி யாவெனும் பெயர்க்கு
மற்றியை பொருளை யிற்றெனவுரைத்த
மாண்புகழ்த் தாயர்நம் மீது
பற்றியை மனத்தா லுமையெலா மெமைப்போற்
பாதுகாப் போ மெனப் பகர்சொற்
பெற்றியை நினையுந் தொறுநமக் குண்டாம்
பெருங்களிப் பளவிட லரிதே. (௩)

அடிப்பவர்க் கெல்லாம் அடிப்படுந் தொண்டாய்
அரும்பழி பார்க்கலா தங்கை
பிடிப்பவர்க் கெல்லாம் பெண்டுமாய் நமது
பெரும்பொரு ளனைத்தையுங் கவர்ந்து
மடிப்பவர்க் கெல்லாந் தலைகொடுத் திருந்து
வந்தநாம் மகிழ்வது மௌவி
முடிப்பவர்க் கெல்லாம் முதல்வியாம் அந்த
மூதறி வாட்டியா லன்றோ. (௪)

குணத்துடன் பிறந்த குலக்கொடி யாமக்
கோமக ளார்க்கொரு மகவாய்
வணத்துடன் பிறந்த வலம்புரி மணியாய்
வளர்கருத் திருவுடை யவராய்
மணத்துடன் பிறந்த மாமலர் போல
வாய்மையிற் பொருந்திய நல்ல
எணத்துடன் பிறந்த எட்டுவேர் டினைப்போல்
இறைவரார் முறையறி பவரே. (ரு)

பகையெழும் புயற்காற் றெழுதலும் பழுதாய்ப்
பலதிறக் கலங்களுங் கலங்கும்
வகையெழுங் கடற்கொந் தளிப்பினை மலய
மாருதந் தணிப்பது போலப்
புகையெழுஞ் சினத்தீ சிகைவிடப் புழுங்கும்
புரவலர்க் காறுதல் புகன்று
நகையெழு முகத்திற் பகைதவிர்த் தருளும்
நரபதி யிவரலா தெவரெ. (சு)

சினத்தினைச் சிறியா ரினத்தினைச் சினந்து
செழுநில மனைத்தையு மொருசெய்ப்
புனத்தினைப் போற்றும் வறியவன் போலப்
பொதுவறப் புரந்தபுண் ணியனைத்
தனத்தினைப் படைத்திங் கிழந்தன மெனவித்
தறையவர் முறையிட நமது
மனத்தினைக் கவர்ந்து மறைந்தமன் னவனை
மறப்பரோ மாநிலத் தவரே. (எ)

நிந்தையே யில்லா நிருபனே யுயிராம்
நெல்லொடு நீருமன் றென்று
முந்தையே யெழுந்த முதுமொழிக் கிலக்காய்
முடிதரித் துலகினைப் புரந்த
எந்தையே யனையார்க் கவரென விந்த
ஜியார்ஜ்எனு மிறையவ ருதித்தார்
தந்தையே மகனாய்ப் பிறக்கின்றா னென்னுந்
தனிமறை பொய்த்தலு முளதோ. (அ)

பெற்றெடுத் தணைக்கும் பெண்ணருங் கலமாம்
பெருங்குணப் பிதாமகி யருளும்
கற்றெடுத் துணர்ந்து நல்வழி யொழுகிக்
காட்டிய தந்தைதன் னறிவு
முற்றெடுத் துருவாய்த் திரண்டுவந் துலகி
லுதித்தன வாமென வியந்து

சொற்றெடுத் தறிஞர் துதித்திட வுதித்தார்
சுடர்முடி புனையுநந் தோன்றல். (கூ)

ஓர்ஜித மனவிந் திரியராய்த் தமக்கென்
றொருவித நலத்தையும் விரும்பா
தூர்ஜித நலங்கள் பலபல வியற்றி
யுலகினுக் குழைத்ததம் முன்னோர்
ஆர்ஜிதப் பொருளாம் பெரும்புகழ் மேன்மேல்
அதியபி விருத்தியா மாறு
ஜார்ஜித புருஷர் அவதரித் ததுநம்
ஜனங்களின் சுகிர்தநற் பயனே. (க0)

அளிமிகுங் கமல முகமலர்ந் தொளிர
ஆழியொன் றுருட்டிவா ணுண்டு
நளிமிகு மலையிற் சேருமம் புயத்து
நாயகன் றிரும்பவும் பெரிய
ஒளிமிகும் பால சூரிய ஞகி
யுயர்குணக் குன்றினி லுதித்தாற்
களிமிகும் பூமி தக்கவோர் பொலிவாற்
கவினுறு மென்பதிற் றடையோ. (கக)

கலையொடு பொருந்தி வளரிள மதிபோற்
கவினெடும் மதியொடும் வளர்ந்தே
மலையொடு பொருந்தி யகலிய மார்பர்
வாணியை யிளமையில் மணந்து
நிலையொடு பொருந்தி வாழ்வுற வவளை
நெஞ்செனுங் கோயிலி லொளித்துச்
சிலையொடு பொருந்தி வருநுதல் மேரித்
திருவையுந் தெரிவுற மணந்தார். (கஉ)

நடையினிற் சிறந்த நாயக மணியாய்
நானில மனைத்தையும் மணிப்பூந்
தொடையினிற் சிறந்த தோளினிற் சுமக்கத்
தோன்றிய தோன்றலா தலினுற்

படையினிற் சிறந்த கடற்படைக் குரிய
பலதுறைக் கலைகளும் பயின்றார்
கொடையினிற் சிறந்த கன்னனுக் கிளைய
கோவெனும் விஜயபூ பதியே. (கங)

காவல னுவான் குடிகளைத் தனது
கண்களாற் கண்டவர் குறையை
ஆவலிற் றவிர்க்கு மனுபவ முடையோ
னுமெனு வறிந்தநம் மரசர்
நாவலந் தீவு முதலிய எல்லா
நாட்டையும் பலமுறை துருவிப்
பூவலம் வந்த புண்ணிய ரென்றாற்
புனிதர்மற் றிவரினு மெவரே. (கச)

அடியிணை யரசர் முடியினிற் பணிய
அரிமணி யாசனத் தமர்ந்து
முடியினை யணிந்தார் திரும்பவு மிங்கு
முடிபுனைந் தொளிருமிவ் வொன்றே
மிடியினைக் களைந்து படியளித் திடுமிவ்
வேந்தர்நம் மிந்திய நாட்டின்
குடியினை யபிமா னிப்பதை யவர்செங்
கோன்மையை நனிவிளக் குறுமே. (கரு)

அயலெனக் கருதிப் பிறர்மதங் களையிங்
கழித்திட நினைப்பது மதியின்
மயலெனத் தெளிந்த நமதுமன் னவர்கோன்
மற்றவை வளர்த்தலே யரசிற்
கியலெனக் கொண்டு புரத்தலை யுணரின்
எவ்வித மதங்களுந் தானுய்ப்
புயலெனத் திகழும் மாதவ னேயிப்
புவியர செனல்பொருந் தியதே. (கசு)

முந்துறு மிடிபோய் உய்ந்துறு குடியாய்
முந்துமுப் பத்துமுக் கோடி

மைந்தரு மகிழ்ந்து வாழ்வுபெற் றுயரக்
கோதமர் வசைபெரு தொளிரும்
ஐந்தருக் குடையோ ஞகியிந் திராணி
யரசியர்* சமேதரா யந்த
விந்திர னெனவே முடிபுனைந் திலங்கு
மிவர்க்கிணை யிருநிலத் தெவரே. (கஎ)

தந்தியாய்த் தூம சகடமாய்க் கலமாய்த்
தடித்தொளி ரதங்களாய் விளக்காய்
முந்தியாங் கனவிற் சிந்தியாப் பொருளாய்
முழுவதும் நவநவ மாக
இந்தியா வெங்குங் குறைவறப் பரப்பி
இதுவொரு புதுவுல கென்ன
நிந்தியா வகையில் நெறிமுறை செலுத்தும்
நிருபர்க ளிவர்கள்போ லெவரே. (கஅ)

யாங்கில மானேம் யாவையு மிழந்தோம்
யாரினுங் கடையராய் விட்டோம்
பாங்கில மென்று பரிதபித் திருந்த
பண்டைநாட் கொடுமையை மறந்து
தீங்கில மினியா மெனத்தலை யெடுத்துத்
திரிதரச் செய்தவிச் செங்கோல்
ஆங்கில வரசின் பெருமையை யந்த
அனந்தனும் அறைவதற் காமோ. (கக)

வாழ்த்து.

மேழிய ராய நமக்கருள் புரிவான் மேரியாந் தாயுடன் சுகமாய்
ஆழியைக் கடந்திங் கத்தினு புரியில் அணிமுடி புனையுநம் மரசர்
பூழியர் தவமாங் கயற்கணி யருளாற் புவியுள தனையும்வீற் றிருந்து
வாழிய ரென்று மகிதலம் வாழ்த்த வாழியர் வாழியர் மகிழ்ந்தே. (உ0)

---

* இந்து ராணி அரசியார்–இந்துதேசத்து ராணிகளுக்கு அரசியார்; சக்கரவர்த்தினி.

பத்திராதிபர் குறிப்பு.

பிர்ம்மஸ்ரீ பண்டித கிருஷ்ணமாசாரியாரலியற்றப்பெற்ற ஜியார்ஜ் சக்கரவர்த்தியவர்களின் வைபவம் என்னும் இப்பாடல்கள், விக்டோரியா சக்கரவர்த்திநியவர்களால் இந்தியரடைந்த நன்மையையும், அவர்களால் 1858-ஆு த்திலளிக்கப்பட்ட ராஜவிளம்பர தாற்பரியத்தையும், ஏழாவது எட்வர்டு சக்கரவர்த்தியவர்கள் சமாதானபுருஷ ரெனப் பெயர்பெற்ற விருத்தாந்தத்தையும், மாட்சிமைதங்கிய ஐந்தாவது ஜியார்ஜ் சக்ரவர்த்தியவர்கள் மாலுமியரசெனப் படைக்கலப்பயிற்சியிற் றேர்ச்சிபெற்றதனையும், அவர்கள் சர்வமதரக்ஷகராக விளங்குதலையும், ஆங்கில அரசாட்சியால் விளைந்த நன்மைகளையும் தமிழ்மக்களெல்லோரும் நன்குணருமாறு இனிமைபெறப் பாடப்பட்டிருக்கின்றன. இப்பாடல்களைப்பாடிய பண்டிதரவர்களுக்கு மதுரை கார்னேஷன் கமிட்டியார் ரூ 50-பரிசளித்தல்கேட்டு மகிழ்கின்றனம்.

1911-ஆு டிசம்பர்மீ 12உ யன்று இராமநாதபுரம் சேதுபதி மஹாராஜா அவர்கள் அரமனையில் நடந்த மாட்சிமைதங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்களின் முடிசூட்டு தர்பாரில் படிக்கப்பெற்ற

மங்கல வாழ்த்து.

நிலைமண்டில ஆசிரியப்பா.*

அங்கண் ஞாலத் தமரிரு ளகல
மங்கலில் கீழ்த்திசை வாரியிற் றோன்றி
விரிகதி ரெரிக்கும் பரிதியங் கடவுண்
மறையா தொளிர்தரு மகிதல முழுவதும்
முறையா லெய்தி முழுமதிக் கவிகையின்

* இஃது பாலவனத்தம் ஜமீந்தாரவர்களின் அரமனை வித்வானும், மதுரைத் தமிழ்ச் சங்கத்து அங்கத்தினருள் ஒருவருமாகிய, இராமநாதபுரம் அரங்கசாமி ஐயங்காரவர்களியற்றியது. இது, சொற்பொருள்சிறந்த செவ்வியசெய்யுள். ப-ர்.

நீழலிற் றங்குபு வாழ்தர வமர்வித்
தறநெறி வழுவா முறைபுரிந் தோம்பிய
பெருங்குண மனைத்து மொருங்கமர் கலமெனப்
பேரிசைதாங்கு விக்டோரியா வென்னும்
பெருமகட் கினிய வருமைகொள் புதல்வன்
தார்கெழு வேந்தர் போர்வினை தவிர்த்த
தாழா வாய்மை ஏழாம் எட்வர்ட்
என்னும் பெருந்தகை மன்னவர் பெருமான்
காதல னாகியிம் மேதினி முழுதாள்
நந்தா வண்மை ஐந்தாம் ஜார்ஜ்என
மாதிரந் துதிக்கும் நீதிபர் தலைவ !
நாரியர்க் கணியெனு மேரியென் றுரைசால்
நின்னருங் காதலி தன்னொடு நீயே
ஒலிகடன் மாநிலங் கலியொழிந் துய்ய
இந்திய மாதுபால் முந்துறு காதலால்
எல்லையின் மகிமைசேர் டில்லியம் பதிபோந்
தோங்கொளி மணிமுடி தாங்கிய விசைந்தே
இங்கெழுந் தருளிய தெங்கணற் றவமே
களிசிறந் தனமே களிசிறந் தனமே
பாருல கெங்குநுஞ் சீர்கணி பரவுக
கேசரி வான்கொடி மாசொழித் துலவுக
அடலுறு மாப்படை கடலினும் பெருகுக
கருதலர் தாழ்க மருவுநர் வாழ்க
அல்லலில் வளமெலா மெல்லைதீர்ந் தோங்குக
கற்றவர் புகழுங் கொற்றவர் நாயக !
நின்பெருந் துணைவியு மன்புறும் புதல்வரும்
சுற்றிய கிளைஞரும் மற்றுள நண்பரும்
ஒருகுறை யிலரா யருகுறை தரநீ
வேண்டிய நல்கலிற் காண்டகு தெய்வமாய்
அகலா வன்பி னிகலா வன்னையாய்
நயத்தகு கல்வி பயத்தலிற் றந்தையாய்

உறுபிணி யகற்றலிற் பெறலரு மருந்தாய்
ஈண்டிரும் புவிகாத் தாண்டுகள் பலசெல
வாழிய மன்னே வாழிய மன்னே
ஊழிகள் பெயரினும் வாழிய மன்னே.

உ

அம்பிகை துணை.

ஸ்ரீ மீனாக்ஷி பதிகம்.

தந்தை நீயுயர் தாயு நீபொறி தந்த லேத்திடு விந்தைநீ
புந்தி நீமதி நாடி வேண்டு பொருளும் பேரு முருவுநீ
சிந்தை மீதுனை யெண்ணி டாது திரிந்து பொய்யுடல் பேணியே
அந்த ணாயுனை யான்ம றக்கினு நாவுன் னாம மாற்றுமே. (க)

உன்னி டாது புரிந்த முன்வினை யொன்றி யென்னை வருத்திடப்
பன்ன வோர்முறை யின்றி யான்படு பாடு நீயறி யாததோ
தென்ன வன்குடி தன்னை வாழ்வு சிறக்க வைத்த தடாதகாய்
அன்னை யேயுனை யான்ம றக்கினு நாவுன் னாம மாற்றுமே. (உ)

இன்ப மென்று மயங்கி யேபொரு ளிச்சை யோடலை வுற்றியான்
துன்ப மேபய னாகி நோவொடு சோர்த னீயறி யாததோ
முன்பு காஞ்சன மாலை மாதவ மூண்டெ ழுந்திடு மாமணீ
அன்பி லாதுனை யான்ம றக்கினு நாவுன் னாம மாற்றுமே. (ந)

திண்ண மென்று நினைந்த பொய்யுட றேய்ந்து வெம்பிணிவாய்ந்துபின்
கண்ணு ளைந்து மனங்க லங்கிடக் கால னென்னை யழைக்குநாள்
நண்ணி டாதெனை மைந்தர் சுற்ற மகற்றி நாடுவர் தஞ்செயல்
எண்ணி டாதுனை யான்மறக்கினு நாவுன் னாம மிசைக்குமே. (ச)

நஞ்சு போன்ற ப்ரபஞ்ச வாழ்க்கையை நாடு புல்லறி வோடுறும்
மிஞ்சு பாடொடு துஞ்சு மென்னை விலக்க நின்னரு ளாபுகல்
விஞ்சை மாத ரிறைஞ்ச மாமது ரைக்கண் மேவிடு சேற்கணாய்
வஞ்ச மாயுனை யான்ம றக்கினு நாவுன் னாமம் வழுத்துமே. (ரு)

குற்ற மென்னியல் பன்றி யேதுங் குணமி லாத பிறப்புளேன்
கற்று ணார்ந்தவ ரோதி னுந்நெறி கண்டி டாமதிப் புன்மையேன்
வற்றி டாக்கட லேழு மன்னை மருங்க ழைத்த மனோன்மணீ
உற்ற வுன்றனை யான்ம றக்கினு நாவுன் னாம முரைக்குமே. (சு)

வேத மீதொளிர் சோதி யாகி விளங்கு முன்னியல் பீதெனப்
பேதை யானொரு போதுணர்ந்து பிழைக்கு நீதி வழுத்துவாய்
வாத வூரடி யார்த மிழ்ச்சுவை வாச மோர்ந்து மகிழ்ந்திடுங்
கோதை யேயுனை யான்ம றக்கினு நாவுன் னாமங்கள் கூறுமே. (எ)

உன்னை யன்றி யெனக்கு நல்லுற வொன்றி லாத துணர்ந்தியான்
துன்னு முன்கழ லென்ம னத்திடை சூட்டி னேனருள் காட்டுவாய்
மின்னு மெண்டிசை யும்பர் சாய்ந்திட வெற்றி பூண்ட கரத்தினாய்
உன்னி டாதுனை யான்ம றக்கினு நாவுன் னாம முரைக்குமே. (அ)

ஆதி யந்த மகன்ற சோதிமெய் யன்பு ளாருண ரின்பமே
கோதொ ழிந்த மனத்த ரோடு குலாவு நல்லிளங் கோதையே
பாத மாறி நடித்த சம்பு மருங்கி லங்கு பசுங்கொடீ
பேத மோடுனை யான்ம றக்கினு நாவுன் னாமம் பிதற்றுமே. (கூ)

வீடு வேண்டிலன் மாதர் சுற்றமும் வேண்டி லேனுடற் பாண்டமாம்
பாடு வேண்டிலன் சிந்தை யுன்னடி பற்று நீதி யியற்றுவை
கூட லார்தவ மொன்றி யோருருக் கொண்டெ ழுந்திடு மீன்விழீ
வாடி யேயுனை யான்ம றக்கினு நாவுன் னாமம் வழுத்துமே. (க0)

உமாதாஸ்.

பத்திராதிபர் குறிப்பு.

இப்பதிகம் செவிக்கினியபண்ணிற் செவ்விய சொற்களா லங்கயற்கணம்மை யகங்குழைந்தருள்புரியுமாறு சாந்தரசந்தோன்ற மனவுருக்கத்துடன் பாடப்பெற்றதாகக் காணப்படுகிறது. ப - ர்.

௳

பூகோளம்.

* சூரியசித்தாந்தமென்னுங் கணிதசாத்திரத்திற் பன்னிரண்டாவது அத்தியாயத்திற் கண்டது.

1. மயாசுரன் சூரியபகவானை வழிபட்டு நின்று வணங்கி,

2. சர்வலோக நாயகா! இப்பூகோளத்தினளவென்ன? அதனுருவமென்ன? அதெதனுனிற்கின்றது? எங்ஙனம் பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது? எங்ஙனம் பாதாளமேழு மிப்பூமியின்கண் பிரிக்கப்பட்டிருக்கின்றன? வென்பதும்,

3. சூரிய பகவான் † இரவு பகலை யெப்படி யுண்டாக்குகின்றாரென்பதும், மற்றையவுலகங்களுக்கெல்லா மெங்ஙன மொளியைத் தந்து பூமியை வலம்வருகின்றாரென்பதும்,

4. அசுரர்கட் கிரவு பகலாகிய காலஞ் சுரர்கட்குப் பகலிரவாகி மாறுபடுவதென்னை யென்பதும், எப்பொழுது சூரியனொருசுற்று முடிந்தகாலத்து இரவு பகல் சமநாழிகை யுள்ளனவாக, விருக்குமென்பதும்,

5. பிதிரர்கட்குரிய சாந்திரமான மாதத்தினமும்; மானிடருக்குரிய தினமும் 60-கடிகை (நாழிகை) களுடையவா யிருப்பதென்னை யென்பதும், எவ்விடத்திலு மிரவு பகலொரேவிதமாயிராதிருப்பதென்னையென்பதும்,

6. தின, மாத, சம்வத்ஸராதிகள் ஏனொருமுறையாக வரவில்லை யென்பதும், இக்கிரகாதிகளும் நக்ஷத்திர மண்டலத்திலுள்ள

* இஃது இப்பொழுது எழுதிவரும் வானசாத்திரத்திற்கு உதவியாக விருக்குமென்பது கருதி யெழுதப்பட்டது. இச்சூரியசித்தாந்தம் பதினோராவது நூற்றாண்டி லெழுதப்பட்டதாகச் சொன்னபோதிலும் இந்தியா முழுமையிலும் இதுவே இந்தியர்களால் அங்கீகரிக்கப் பெற்றிருக்கின்றது. ஐரோப்பியர்களும் இதனதுயர்வை மதிக்க வாரம்பித்திருக்கின்றனர்.

† படர்க்கைக் கூற்று அர்த்தாநுவாதம். ப - ர்.

நக்ஷத்திரங்களு மெங்ஙனஞ் சஞ்சரிக்கின்றனவென்பதும், அவை யெப்படி நிலைபெற்றிருக்கின்றன வென்பதும்,

7. பூமியினின்று மெவ்வளவு தூரத்திற்கிரகவலயங்கள் (orbits of the Planets) இருக்கின்றனவென்பதும், அவைகளின் பரப்பு எத்துணை யென்பதும், அவைகளின் முறையென்னையென்பதும்,

8. வேனிற் காலங்களிற் சூரியவெப்பமிகுந்திருப்பதேன்? கார் கூதிர்காலங்களில் அவ்வெப்பங் குறைவானேன்? சூரிய கிரணங்கள் எவ்வளவுதூரம் வியாபித்திருக்கும்? எத்துணைக் காலபேதமுண்டு என்பதும், அவைகளின் பிரயோஜன மென்னையென்பதும்,

9. ஆகிய வினைகளில் சர்வலோக நாயகனுஞ் சர்வதயாபரனுமாகிய நீ யொருவனே எனது சந்தேகத்தை நிவிர்த்திக்கக்கூடியவனுகையால் நிவிர்த்திசெய்ய வேண்டுகின்றேன்.

10. என்று இவ்விதமாக வினவப்பட்ட மயனுடைய வசனத்தைக் கேட்ட பகவான் இந்நூலினுத்தரபாகமான விரண்டாது பிரிவையுரைக்கலுற்றூர்.

11. ஓ மயாசுர அத்தியாத்மமென்னு மிரகசியப்பொருளைக் கேட்பாயாக. என்னை வழிபடுவார்க்கு முடியாதகாரியமொன்றுமில்லை.

12. சர்வதயாபரன் வாசுதேவரே; அவ் வாசுதேவரினபின்னமான புருடனே காணக்கூடாததும், நிஷ்களங்கமானதும், சாந்தமானதுமான விக் கோளத்தி னுன்மாவாம்.

13. சர்வ வியாபியான அப்புருடனைச் சங்கர்ஷணதேவரென்று சொல்வர்; அவர் பிரகிருதியின் காரியமாகிய வப்புவையுண்டாக்கினர்.

14. இவ்வப்பு (அப் பிரகிருதியின் சம்பந்தத்தால்) சுவர்ணுண்டமாய் அந்தகாரத்திலமூழ்ந்திற்று; இச் சுவர்ணுண்டத்தில் அநிருத்தர் தோன்றினர்.

15. இச் சர்வேசுவரனுன அநிருத்தரே (சுவர்ணுண்டத்திருந்த காரணம்பற்றி) வேதத்தில் இரணியகர்ப்பரென்று சொல்லப்படுகிறூர்;

அவர் ஆதியில் தோன்றியதால் ஆதித்திய னென்றும், (இப்புவியைத்) தோற்றுவித்த தன்மையாற் சூரியனென்றுஞ் சொல்லப்படுகிறார்.

16. சூரியனென்றுஞ் சவிதாவென்றுஞ் சொல்லப்படும் அநிருத்தர் இருளைக் கடியக்கூடிய பேரொளியாம். (சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரமென்னும்) முத்தொழிலைச் சரங்களினிடத்துச் (இரணிய கருப்பத்தினின்றும்) சோதிமயமாக நின்றியற்றுகின்றனர்.

17. இச் சுயம்பிரகாசமான அநிருத்தர் இருளைச் சேதிக்கக் கூடியவராகையான் மஹானெனப்படுவார். இருக்குவேதஞ் சக்கரமாயுஞ் சாமங் கிரணங்களாயுமிருக்கின்றன.

18. *முக்கலைகளு நிறைந்த சர்வேசுவரனை அநிருத்தரே காலமாம்; காரணருஞ் சர்வவியாபியுமான பரமபுருடனே யான்மாவாயிருத்தலால் இவ் வண்டமவராணையி னிற்கின்றது.

19. சம்வத்ஸரங்களாகிய சகடங்களையுஞ், சப்தவாரங்களாகிய புரவியையுமுடைய பூமண்டலமாகிய ரதத்திலிருந்து அநிருத்தர் எப்பொழுதும் பிரதக்ஷிணஞ்செய்கின்றனர்.

20. அநிருத்தரின் ஒளி முக்காற்பாகம் † விண்ணின் மறைபட்டுங் காற்பாகம் பூமியிலுந் தெரிகின்றது; அநிருத்தர் பிரமனைப் (நான்முகனை) படைத்து அகங்காரத்தையு முண்டாக்கினர்.

21. சர்வ காரணராயுள்ள பிரமதேவர்க்கு வேதத்தையருளிச் செய்து அவரை யிரணியகர்ப்பத்தூடே நிற்கச்செய்து அநிருத்தர் தாமே இப் பூமண்டலத்தைச் சுற்றிப் பிரகாசத்தைக் கொடுக்கிறார்.

22. பிதாமகர் அகங்காரத்தை யடைந்தவுடனே சிருட்டிக்கத் தொடங்கினர்; அவர் மனதின்கணின்று சோமனுங், கண்ணிலிருந்து சூரியனுந் தோன்றினர்கள்.

---

* முக்கலைகள் இருக்கு, யஜுர், சாமமென்னு மூன்று வேதங்கள்.

† சூரியனது ஒளிமுழுதும் பூமி பெறுவதில்லையென்னும், ஐரோப்பிய சித்தாந்தமுமிங்குக் கவனிக்கத்தக்கது.

23. பிரமாவினது மனதின்கணிருந்து ஆகாசமும், அதன்கணிருந்து வாயுவும், அவ் வாயுவினின்று தேயுவும், அத்தேயுவினின்று அப்புவும், அவ்வப்புவினின்று பிருதிவியு முண்டாயின.

24. சூரியனுஞ் சந்திரனும்-அக்கினியு மப்புவுமாவர்; மற்றைய பஞ்சக்கிரகங்கள் * அக்கினி, பிருதிவி, ஆகாசம், அப்பு, வாயுக்களினின்று முறையே யுண்டாயின.

25. காமாதிபந்தங்களை வெல்லக்கூடிய பிரமதேவன் ஞானே யொருவிருத்தத்தைவளைத்து அதனைப் பன்னிருகூறுக்கி இராசி விருத்தமெனவும்; அதனையே 27-கூறுகச்செய்து நக்ஷத்திரவிருத்த மெனவும் பெயரிட்டனர்.

26. பலவகையாகச் சத்துவமுதலிய குணங்களை முறையானே சேர்த்துப் பற்பல குணமுடைய வஸ்துக்களையுந், தேவதைகளையுஞ், சராசரங்களையும் படைத்தனர்.

27, 28. குணஞ்செயல்களின் வேறுபாடுகட்குத் தக்கபடி சராசரங்களைச் சிருட்டித்தபின்னர், மஹிமைபெற்ற பிரமாவானவர் கிரகங்கள், நக்ஷத்திரங்கள், தாராகணங்கள், பூவுலகம், மற்றையவுலகங்கள், தேவதைகள், இராக்ஷசர்கள், மானிடர்கள், சித்தர் முதலியோரை யவரவர்கள் தகுதிக்கேற்றவாறு சரியான இடங்களில் வேதத்திற் கூறியபடி யமைத்தனர்.

29. இந்தப்பிரமாண்டம் (இரணியகர்ப்பம்) குழிவையுடையது; இதனுட் பூலோகமுதலிய வுலகங்களடங்கும்; இது ஒரு சம்புடம் போன்று கடகங்களைச்சேர்த்ததுபோல உருண்டைவடிவாகவுள்ளது.

30, 31. இப் பிரமாண்டத்தினூடே செல்லும் ரேகைக்கு வியோமகாக்ஷம் (Orbit of Heaven) என்று பெயர். இதனுள், தாராகணங்கள் சுழலுகின்றன. இவைகளின்கீழ் சநி, குரு, செவ்வாய், † சூரியன், சுக்கிரன், புதன், சந்திரன் முதலியவை யொன்றன்

* பஞ்சக்கிரகங்களாவன:—செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சநி.

† சூரியனென்பதற்குப் பதிலாகப் பூமியை வைப்பின் ஐரோப்பிய சித்தாந்தத்திற்கும், இந்திய சித்தாந்தத்திற்கும் பேதமில்லை.

பின்னொன்றாய்ச் சுற்றுகின்றன; இவற்றின்கீழ்ச் சித்தவித்தியாதா வுலகங்களிருக்கின்றன.

32. பிரமதேவனது நிதானபலத்தாலிப் பூமண்டலமானது பிரமாண்டத்தின் மத்தியில் ஆகாயத்திலிருக்கின்றது.

33. பூமண்டலத்தி னுட்குழிவாற் (concave) (1)பொருந்தி நிற்கும் ஏழு பாதாளலோகங்களிலும் நாகர், அசுரர் முதலாயினோர் உத்தம சஞ்சீவிகளின் இரசத்தாற் சீவிக்கின்றனர்.

34. பொன்மயமான மேருமலை பூகோளத்தினூடே மத்தியத்திற் (அக்ஷரேகையைப்போல்) பலவிதமான இரத்தினங்கள் மலிந்ததாகச் செல்லுகின்றது.

35. இம்மேருவின் வடபுறத்தில் இந்திரன் முதலான தேவதைகளும், புண்ணியோத்தமர்களான மகரிஷிகளும், தென்புறத்தில் அசுரர்முதலானவர்களும் வசிக்கின்றனர்; ஆகையாலொருவரை யொருவ ரெதிர்த்திருக்கின்றனர்.

36. இம்மேருவை லவணசமுத்திரஞ் சுற்றியிருக்கின்றது; இச்சமுத்திரமே யிக்கோளத்தை யிருபிரிவினதாகச்செய்து அசுரர்களையுந் தேவர்களையு மொன்றுசேரவொட்டாமற் செய்கின்றது.

37. இம்மேருவின் மத்தியபாகத்தைச் சுற்றிக் கிழக்கு முதலான நான்கு புறங்களிலும் பல தீவுகளாகப் பொருந்திய பூமிகளில் நான்கு நகரங்களிருக்கின்றன.

38. மேருவின் கீழ்புறமாகப் பத்ராஸ்வவர்ஷம் என்னுந்தேசத்தில் யாமகோடி யென்னும் நகரம் பொன்னாற்செய்த கொத்தளங்களையும், மாட மாளிகைகளையு முடைத்தாயிருக்கின்றது.

---

(1) யாதொரு வஸ்துவிருத்தாகாரமாயிருப்பதில் விளிம்புகளுயர்ந்தும், மத்தியிற் பள்ளமாயு மிருப்பதற்கு (concave) என்றும், மத்திமேடாயுஞ் சுற்றுப் புறங்கள் அதனைவிடத் தாழ்வாயுமிருப்பதற்கு (convex) என்றும் பெயர்.

39. அங்ஙனமே பாரதவர்ஷம் என்னுந் தென்றேயத்தில் *இல ங்கை யென்னும் நகரமிருக்கின்றது; மேற்குத்திசையிற் கேதுமால வர்ஷத்தில் ரோமக பட்டினமிருக்கின்றது.

40. உத்தரதிசையிற் குருவர்ஷத்திற் சித்தபுரமிருக்கின்றது இந்நாட்டில் நிஷ்களங்கரான மனிதர்கள் வசிக்கின்றனர்.

41. இந் நான்கு நகரங்களும் பூமியின் சுற்றளவிற் சரியான நான்கிடங்களிலிருக்கின்றன ; தேவதைகட் கிருப்பிடமான மேருபர்வ தம் சமமான தூரத்தி லந்நகரங்கட்கு வடக்கேயிருக்கின்றது.

42. சூரியன் அயனங்களிற் செல்லும்பொழுது இந் நகரங் களுக்கு மேலேநேராகச் செல்லுவதால் அயனவிருத்திகளாவது, பூமான அக்ஷமாவது, (2)அவச்சாயை பாதச்சாயையாவது இந் நகரங் களிலுண்டாவதில்லை.

43. மேருவின் இருமுனை (உத்தரதக்ஷிண துருவங்கள்) களிலும் இரண்டு துருவநக்ஷத்திரங்களிருக்கின்றன ; இந்தவிரண்டு நக்ஷத்தி ரங்களும் அந்தப்பட்டினங்களிலிருந்து பார்க்கின் (3)அநுமானவானிற் காணப்படும்.

---

* இலங்கையென்பது தற்காலத்துவழங்குஞ் சிலோனில்லையென்றும், நிரக்ஷ ரேகை ஆரம்பமாகுமிடமென்றுஞ் சொல்லுவர் திவான் பகதூர் L. D. சுவாமிக் கண்ணுப்பிள்ளை B. A. B. L. L.L.D. (Lond.)

(2) பூமியானது நாடிவலயத்தில் சூரியனைச்சுற்றிப் போகும்பொழுது (அதா வது நிரக்ஷரேகையில்) (Equator) ஓடும்பொழுதி அந்த இலங்காபுரியிலோ, அல்லது யாமகோடியிலோ, சூரியனுச்சியிலிருப்பதாற் சாயையுண்டாவதில்லை.

(3) அநுமான வானமாவது நா மாகாயத்தைப் பார்க்கும்பொழுது பூமியுமா காயமுமொன்ருய்ச் சேர்ந்ததுபோற் றேன்றுமிடம்; இதனை ஆங்கிலத்தில் ஒரை ஸன் (Horizon) என்பர். சூரிய சித்தாந்தத்தில் நின்றவிடத்திலிருந்து ஆகா யத்தில் 90-பாகையைப் பார்க்குமிடம் அநுமான வானமென்பர். இக் காரணத்தி னுல் அடுத்த 44-வது சுலோகத்திற் கூறப்பட்டபடி 90-பாகை செல்கின்றது. இவைகளே மேஷாயனம், துலாயனமெனப்படும். இவற்றின் விரிவையும், இவைகளுண்டாகுங் காரணங்களையும் விரிவாகப்பூமியைப்பற்றி வானசாத்திரத் தில் விவகரிக்கும்போது கூறப்படும். அன்றியும், யாண்டாண்டுச் சூரியன் சுற்றுவ தாக வெழுதப்படுகிறதோ அவ்விடங்களிலெல்லாம் பூமி சலிப்பதாகவைத்து ஆழ் ந்து நோக்குவோமாயின் இவ் விதிகட்கும் ஐரோப்பிய வானசாத்திரத்திற்கு மொற்றுமை தெற்றெனப்புலப்படும்.

44. இந் நகரங்களின் அநுமான வானத்திற் றுருவநக்ஷத்தி ரங்கடோன்றுவதால், பூமான அக்ஷங்களினுயர்வில்லையாக, அக்ஷரே கையில் 90-பாகை சென்றிருக்கும்; அதுபோலவே மேருவிலும் 90-பாகை சென்றிருக்கும்.

45. உத்தர கோளார்த்தத்தின்மேற் சூரியன் நிற்கும்போது அவர் தேவர்கட்கு மேஷத்தின் முதற்பாதத்திலு மசுரர்கட்குத் துலாத்தின் முதற்பாதத்திலுமாகக் காணப்படுகிறார்.

46. இச் சலனத்தாற் கோடையிற் சூரியவெப்பந் தேவலோ கத்தில் (உத்தரகோளார்த்தத்தில்) மிகுதியாயும் மாரியில் அசுரலோ கத்தில் மிகுதியாயுமிருக்கும்.

47. சுரர்களு மசுரர்களும் மேஷதுலாயனகாலங்களிற் சூரியனை யநுமானவானிற் காண்கின்றனர். உத்தர, தக்ஷிண கோளார்த்தங் களிற் சூரியனிற்கும்பொழுது முறையே தேவர்கட்குப் பகலிரவுக ளும், அசுரர்கட் கிரவுபகல்களுமுண்டாகின்றன.

48. சூரியன் மேருவிலுள்ள (உத்தரகோளார்த்தத்திலுள்ள) ஜனங்கட்கு மேஷமுதன் மூன்றிராசி (மேஷம், ரிஷபம், மிதுனம்) களிற் செல்ல முற்பகல் கழிகின்றது.

49. அவ்வாறே கடகமுதலாக மூன்றிராசிகளிற் செல்லப் பிற் பகல் கழிகின்றது; இவ்வாறே துலாதியாக மூன்று மூன்றாகச் செல்ல (அசுராதிகட்கு) முற்பகலும் பிற்பகலுமுடிகின்றன.

50. இவ்வாற்றால் அவர்களுடைய பகலிரவுகள் முரணுமாறு சூரிய னொருவலயம் வர நாளுண்டாகிறது.

51. நடுப்பகலும், நள்ளிரவும் உத்தராயண தக்ஷிணாயநங்களின் பொழுது முரணாக வேற்படுகின்றன; தேவர்களு மசுரர்களு மொரு வரைக்காட்டிலு மொருவர்மேலுள்ளவரென நினைக்கின்றனர்.

(இன்னும் வரும்.)

இலக்கணவிளக்க பரம்பரை,
திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

புத்தகக் குறிப்பு.

கோமதி கோகிலமானது:—இத் தமிழ்நாவல் பசுமலை அமெரிக்கன் உயர்தரக் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்-நெ. ரா. சுப்பிரமணிய சர்மா அவர்களாலியற்றப்பெற்றது. இது தற்காலச் சீர் திருத்தமுறையைத் தழுவிப் படிப்பவர்க்கினிமைபயக்கும்படி யிடை யிடையே யெடுத்துக்கொண்ட விஷயங்களுக்கேற்ற மேற்கோள் காட் டித் தெளிவான நடையிலெழுதப்பட்டிருக்கிறது. இதனை மதுரை யிலுள்ள ஆங்கில கலாசாலைகளில் மாணவர்களுக்குக் கற்பிக்கும் பாட மாக வைத்திருப்பதுகேட்டுத் திருப்தியடைகிறோம். விலை அணா 10. வேண்டுவோர் அதன் ஆசிரியரிடமிருந்து பெறலாம்.

ப—ர்.

பிழைதிருத்தம்.

"செந்தமிழ்" தொகுதி ௩, பகுதி எ-ல் ௩௧௮, ௩௧௯-ஆவது பக்கங்களின் தலைப்பில் யசோதரகாவியத்தின் காலவரையறை என் றிருப்பவற்றை யசோதரகாவியகதையின் காலவரையறை எனவும், "செந்தமிழ்" பத்தாந்தொகுதி முதற்பகுதி ௧௯-ஆவது பக்கத்தில் ஜைநர்களின் ஆதிபாஷையென்ற தலைப்பின்கீழ் ௩-ஆம் வரியில் ஜைனர், சிரமணர் என்றிருப்பதை ஜைனர், க்ஷபணர், சிரமணர் எனவும், ௬ பகுதி 22-ஆவது பக்கம் ரு-வது வரியின் கடைசியில் தனபாலமுனிவர் என்றிருப்பதை தயாபாலமுனிவர் எனவும் திருத் திக் கொள்ளவேண்டும்.

ப—ர்.

190

உ

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

இச் சங்கத்தார் 1912-ஹு விரோதிகிருதுஹு தைமீ 9, 10, 11-ம் தேதிகளில் நடாத்திய தனித்தமிழ்ப் பரீக்ஷைகளிற் றேறிப் பரிசும், யோக்கியதா பத்திரமும் பெறும் மாணுக்கர்களின் விவரம்.

பண்டித பரீக்ஷை.

I-வது வகுப்பு.

1. 8. A. கந்தசாமி பிள்ளை, நல்லிப்பாளையம், நாமக்கல்தாலூகா.
(ரூபா 100 பெறத்தக்க தங்கத்தோடா முதற்பரிசு)

பாலபண்டித பரீக்ஷை.

II-வது வகுப்பு.

1. 1. ஆ. கார்மேகக்கோன், சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

பிரவேசபண்டித பரீக்ஷை.

II-வது வகுப்பு.

1. 5. மா. கோவிந்தசாமிபிள்ளை, காட்டுப்புத்தூர், திருச்சி ஜில்லா.
2. 2. அ. கிருஷ்ணசாமி நாயுடு, சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை தமிழ்ச்சங்கம், மதுரை.
3. 13. முருகைய முதலியார், திருப்பத்தூர், சேலம் ஜில்லா.
4. 4. K. ஆறுமுகம், சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, தமிழ்ச்சங்கம், மதுரை.
5. 10. சங்கர நாராயணையர், பறக்கை, திருவிதாங்கூர் ஸ்டேட்.
6. 12. சாஸ்தாங்குட்டிப்பிள்ளை, தென்கொம்புதூர், திருவிதாங்கூர் ஸ்டேட்.

P. S. Subramania Aiyer,
President.

உ

சிவமயம்.

நோட்டீஸ்.

இதனல் எல்லோர்க்கும் அறிவிப்பது யாதெனில்:—

இதுவரையில் அச்சிடப்பெற்று வெளிவாராத அநேகநூல்கள் ஏட்டுப் பிரதிகளாய் இருப்பவைகளை அதிகமுயற்சியின்பேரிற் றேடியெடுத்து மதுரைத் தமிழ்ச்சங்கம் லைப்ரேரியில் வைத்திருப்பதில் அவைகளைப் பிழையின்றி யச்சிட்டு வெளிப்படுத்துவது மிகவும் அவசியமாகவும், உலோகோபகாரமாகவுமிருக்கின்றது. தமிழ்நூலி லபிமானமும் ஷெ தமிழ்ச் சங்கத்தினபிவிருத்தியில் நோக்கமுமுள்ள தமிழ்வித்வான்கள் அவைகளைப் பார்வையிட்டுப் பிழையகற்றிச் சுத்தமாக அச்சிட்டு வெளிப்படுத்தினல் மிகவுஞ்சிலாக்கியமாகவிருக்கும். ஆனதுபற்றி ஷெ நூல்களை வெளியிடுவதிலபிமானமுள்ள வித்வான்கள் அடியிற்கண்ட நிபந்தனைகட்குட்பட்டு அவைகளைச் சங்கமச்சாபீஸில் அச்சிட்டு வெளிப்படுத்தலாம்.

நிபந்தனைகளாவன.

1. மேற்கண்டவிதமாகப் பார்வையிட்டு அச்சிடவிரும்புகிறவர்கள் சங்கம் மானேஜருக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்து அவர்கள் அச்சிடவிரும்பும் புத்தகங்களை மானேஜர் முன்னிலையிற் பார்வையிட்டுக் கொள்ளலாம்.

2. அவர்கள் பார்வையிடும் புத்தகத்திற்கு அவர்கள் அபேட்சைப்படி யொருபிரதியு மெடுத்துக்கொள்ளலாம்; ஆனல் அவர்கள் பார்வையிடும் புத்தகத்தையாவது அவர்கள் தயாரிக்கும் பிரதியையாவது சங்கத்தைவிட்டு வெளியிற் கொண்டுபோகக்கூடாது.

3. அவர்கள் பார்வையிட்டுத் தயாரித்துக்கொடுக்கும் பிரதிகளைச் சங்கம் ஆபீஸில் அச்சிடவேண்டும்.

4. அவர்கள் காகிதம் வாங்கிக்கொடுத்து அச்சுக்கூலியுங்கொடுப்பதாயிருந்தால் அச்சிடப்பெறும் மொத்தப்பிரதிகளில் நூற்றுக்கு ஐந்து பிரதிவீதம் சங்கத்திற்கு அவர்கள் கொடுத்துவிடவேண்டும்.

5. காகிதக்கிரயமாவது அச்சுக்கூலியாவது அவர்கள் கொடுக்காத பட்சத்தில் அச்சிடப்பெறும் மொத்தப்பிரதிகளில் மூன்றிலொருபாகமவர்கட்கும் பாக்கி மூன்றிலிரண்டுபாகஞ் சங்கத்திற்குமாகப் பிரித்தெடுத்துக்கொள்ளவேண்டியது.

6. அச்சுக்கூலியாவது அல்லது காகிதக்கிரயமாவது அவர்கள் கொடுக்கும்பட்சத்தில் அச்சிடப்பெறு மொத்தப்பிரதிகளில் மூன்றி லிரண்டுபாகமவர்கட்கும் பாக்கிமூன்றிலொருபாகஞ் சங்கத்திற்குமாகப் பிரித்தெடுத்துக்கொள்ளவேண்டியது.

7. ஷை புத்தகங்களின் காப்பிரைட் சங்கத்திற்குப் பாத்தியமே தவிர அவர்கட்குப் பாத்தியமில்லை. ஆனால் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் இன்னாராற் பரிசோதிக்கப்பெற்று அச்சிடப்பட்டதென்று, டைடில்பேஜில் விவரணம்எழுதப்படும்.

8. அவர்கள் பாகத்திற்குக் கிடைக்கும் பிரதிகளுக்கு நேரக்கூடிய பைண்டிங் சார்ஜை யவர்களே கொடுத்துக்கொள்ள வேண்டியது.

9. ஒரு பதிப்பு வெளியில்வந்து மூன்று வருடத்திற்குள்ளாக அப்படிப் பதிக்கப்பெறும் புத்தகத்தைச் சங்கத்தார் மறு பதிப்புக்குக் கொண்டுவரமாட்டார்கள்.

10. ஒவ்வொரு புத்தகத்தின் விலையும் அச்சிடப்பெற்றதின் பேரிற் சங்கத்தாரால் நிச்சயிக்கப்படும்.

11. மற்றப்படி ஸ்பெஷலாக நிபந்தனைகள் பேசிக்கொள்ள இஷ்டமுள்ளவர்கள் சங்கம் மானேஜரிடம்வந்து விவரங்கள் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

P. S. Subramania Aiyer,
President.

1911-௵ நவம்பர்மீ 1உ முதல் 30உ முடிவுவரையுள்ள வரவு செலவு கணக்கு.

வரவு.	தொகை ரூபா.	அ.	ப.	செலவு.	தொகை. ரூபா.	அ.	ப.
1911-௵ அக்டோபர், நவம்பர்மீ ங்களுக்குரிய புதுக்கோட்டை சமஸ்தானம் மாதச் சந்தா வரவு ...	100	0	0	சென்ற அக்டோபர்மீ த்திய சம்பளம் பட்வாடா ரிஜிஸ்டர்ப்படி சங்கம் சிப்பந்திகளுக்குச் செல்லாக்கியது ரூ	357	14	6
				பைண்டிங் ஸ்டேஷரிச்செலவு 0—4—0			
				ஷை கண்டின்ஜன்சிச் செலவு 17—3—4			
				ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...	17	7	4
விரோதிகிருது௵ ஐப்பசி, கார்த்திகைமாசங்களுக்கு காணுகோத்தான் மகா-ள-ள-ஸ்ரீ சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்களிடமிருந்து மாதச்சந்தா வரவு ...	100	0	0	பிரிண்டிங் ஆபீசு உபயோகத்துக்கு கனம் பிரசிடெண்ட் டிரஸ்டியவர்கள் உத்தரவுப்படி டைப்ஸ் ரீக்காஸ்ட் செய்த வகையில் சார்ஜ் செலுத்தியது 79— 9—0			
செந்தமிழ்ச் சந்தா வகையில் வரவு ...	42	2	0	ஷை ஆபீசுசம்பந்தமாய் ரயில்சார்ஜ் வகையிற்செலவு 12—12—6			
பிரிண்டிங்ஆபீசு அச்சுக்கூலிவகையில் வரவு...	190	9	6	ஷை ஆயில் என்ஜின் சம்பந்தமாய் எண்ணெய்ச்செலவு 11— 2—4			
பைண்டிங் ஆபீசு வரவு ...	29	6	0	ஷை கண்டின்ஜன்சிச்செலவு 21—14—4			
புத்தக விற்பனை வரவு ...	50	6	6	ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...	125	6	2

வரவு					செலவு				
சங்கம் காலிநிலம் மாக்கடை வாடகை விரோதிகிருது௵ ஐப்பசி மீ த்துக்கு வரவு	35—0—0				போஸ்டேஜ் வகையிற் செலவு …		20	0	0
					ரிபேர்வகையிற் செலவு …		6	2	3
தனித்தமிழ்ப்பரீக்ஷை கட்டணம் வரவு	10—0—0				பிரசிடெண்ட் டிரஸ்டியவர்கள் உத்தரவுப்படி டைப்ஸ் ரீக்காஸ்டுக்காக சென்னைபோய் வந்த ஆபீசு Head. கம்பாசிட்டர் N. சுப்பய்யாசெட்டியாருக்கு படிச்செலவு வண்டிவாடகை வகையரு செலவு	18—12—6			
விளம்பர வகையிற் சார்ஜ் வரவு (Advertisement Charges)	12–15—0				ஆபீசு கண்டிஞ்ஜன்சிச் செலவு	1— 3—6			
இச்சங்க அங்கத்தினருள் ஒருவராகிய பாகூர் கவர்ன்மெண்டு ஸ்கூல் டீச்சர் மகா-௱-௱-ஸ்ரீ A. கோபால முத்துசாமி நாயுடு அவர்களிடமிருந்து நன்கொடை வரவு …	5—0—0				செந்தமிழ் விஷயதானத்துக்காக கனம் பிரசிடெண்ட் டிரஸ்டியவர்கள் உத்தரவுப்படி அனுப்பியது	5— 8—0			
					ரசீதுஸ்டாம்பு, மனியார்டர் கம்மிஷன் செலவு	0— 9—0			
மேற்காட்டிய விவரப்படி வரவு கூ …		62	15	0	கலாசாலை white wash செய்த வகையிற் செலவு	3— 0—0			
					கலாசாலை சம்பந்தமாய் மண் எண்ணெய் வகையரு செலவு	3— 1—8			
					டைப்ஸ் பெட்டி பாக்கிங் செய்த வகையிற் செலவு	0—12—0			
					வண்டி வாடகை சுமைகூலிச் செலவு	0— 8—6			

				பிரிண்டிங் ஆபீஸ் பில்ப்படி சங்கம் ஆபீஸ் அச்சுக்கூலிக்குச் செல் 52—14—0			
				ஷை ஆபீசு பில்ப்படி ஷை ஆபீஸ் பைண்டிங் கூலிக்குச் செல் 4—8—0			
				ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...	90	13	2
				பிரஸிடெண்ட் டிரஸட்டியவர்களிடமிருந்து கடனாக வரவுவந்திருந்த ரூ 1000-த்தில் ஷை கடனுக்காகச் செலுத்தியது ...	200	0	0
ஆக மொத்தம் ரூ	575	7	0	ஆக மொத்தம் செலவு ..	853	8	11
சென்ற அக்டோபர்மீ த்தின் கடைசித்தேதியில் நின்ற பாக்கித்தொகை ரூ ...	365	12	9	போக பாக்கியிருப்பு ...	87	10	10
ஆக மொத்தம் வரவு ...	941	3	9	ஆக மொத்தம் ...	941	3	9
ஆக மொத்தம் ரூ ...	941	3	9	ஆக மொத்தம் ...	941	3	9

திரு. நாராயணையங்கார்,
மானேஜர்.
22-12-11.

Audited and found Correct
S. GOPALASAMY IYENGAR,
Auditor. 23—12—11.

மதுரைத் தமிழ்ச் சங்கத்து

1911ஆ டிசம்பர்மீ 1உ முதல் 31உ முடிவுவரையுள்ள வரவு செலவு கணக்கு.

வரவு	தொகை ரூ.	அ.	ப.	செலவு	தொகை ரூ.	அ.	ப.
செந்தமிழ்ச்சந்தா வரவு ...	48	0	0	1911ஆ நவம்பர் மீ த்துக்குச் சங்கச்சிப்பந்திகளுக்கு சம்பளம் செல்லாக்கிய வகையிற் செலவு ரூ	386	3	9
பிரிண்டிங் ஆபீசு அச்சுக்கூலி வரவு207—4—6				1911-ஆ அக்டோபர்டு மீ த்திய கலாசாலை மாணவர்களின் போஷணை பட்வாடாப்படி சிலருக்குச் செல்லாக்கிய வகையில் செலவு ரூ	20	0	0
சங்கம் ஆபீசு சம்பந்தமான அச்சுக்கூலி வரவு 4—4—0				பைண்டிங் ஆபீசு ஸ்டேஷனரிச் செலவு 0-7-0			
ஆக பிரிண்டிங் ஆபீசு வரவு ...	211	8	6	ஷை ஆபீசு ரயில்சார்ஜ் சம்மந்தமாய்ச் செலவு ... ... 0—4—0			
பைண்டிங் ஆபீசு வரவு ... 33—8—0				ஷை ஆபீசு கண்டின்ஜன்சிச்செலவு15-12-5			
சங்கம் ஆபீசு சம்பந்தமான பைண்டிங் வரவு 19—0—0				ஆக மேற்காட்டிய விவரப்படி பைண்டிங் ஆபீசுச்செலவு ...	16	7	5
ஆக பைண்டிங் ஆபீசு வரவு ...	52	8	0	பிரிண்டிங்ஆபீசு உபயோகத்துக்கு இங்கிலீஷ் Capital Types தருவித்தவகையில் கிரயம் செல்லாக்கியது ... 44—8—0			
				ஷை ஆபீசு ஸ்டேஷனரிச்செலவு21—2—0			
புத்தக விற்பனை வரவு ...	70	5	0	ஷை ஆபீசு ஆயில் எஞ்சின் சம்பந்தமாய் எண்ணெய்ச் செலவு 15—5—0			
				ஷை ஆபீசு கண்டின்ஜன்சிச்செலவு 6— 9—10			

197

சங்கம் காலி நிலம் மாக்கடைவாடகை நாளது விரோதிகிருதுஸு கார்த்திகை மீ த்துக்கு வரவு ... ... 35—0—0			
தனித்தமிழ்ப்பரீக்ஷைக்கட்டணம் வரவு 3—0—0			
ஆக மேற்காட்டிய விவரப்படி வரவு ...	38	0	0
சங்கம் கௌரவ காரியதரிசிகளிடமிருந்து கடனாக வரவு ...	250	0	0

ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...	87	8	10
போஸ்டேஜ் வகையிற் செலவு ...	10	0	0
சங்கம் உபயோகத்துக்கு வாங்கி மாற்றிக்கொண்டிருந்த பங்களாவுக்குக் கணக்குத்தீர்த்து வாடகைக்கு செல்லாக்கியது 128—14—3			
சங்கம் காலிநிலத்துக்கு 1912-ம் ஸு மார்ச்சுமீ முடிய 1 வருஷத்துக்கு முனிசிபல்வரி செலுத்தியது. 30— 0—0			
ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...	158	14	3
லைபிரேரிஉபயோகத்துக்கு வாஙகிய புத்தகம்...	0	6	0
கார்னேஷன் கொண்டாட்டத்துக்கு மாட்சிமை தங்கிய மகாராஜா 5-ம் ஜார்ஜ் சக்ரவர்த்தியவர்கள் மகாராணியவர்கள் படங்கள், லைட் முதலிய செலவு 6— 0—0			
ஆபீசு ஸ்டேஷனரி கண்டின்ஜன்சி வகையரு சில்லரைச் செலவு 1—14—7			
ரசீதுலேபிள் சுமைகூலி வகையரு செலவு 0— 2—6			
பிரிண்டிங் ஆபீசு பில்ப்படி சங்கம் ஆபீசு அச்சுக்கூலி வகைக்குச் செல் 4— 4—0			
ஷை ஆபீசுபில்ப்படி ஷை ஆபீசு பைண்டிங் வகைக்குச் செல் 19— 0—0			
ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...	31	5	1

ஆக மொத்தம் வரவு ..	670	5	6				
சென்ற நவம்பர் மீ" த்தின் கடைசித்தேதியில் நின்ற பாக்கித்தொகை ...	87	10	10	ஆகமொத்தம் செலவு ரூ	710	13	4
				போக பாக்கியிருப்பு ...	47	3	0
ஆக மொத்தம் ...	758	0	4	ஆக மொத்தம் ...	758	0	4
ஆ மொத்தம் ...	758	0	4	ஆக மொத்தம் ...	758	0	4

திரு. நாராயணையங்கார்,
மானேஜர்.
15-1-12.

Audited and found Correct

S. GOPALASAMY IYENGAR,
Auditor. 1—2—12.

கொனோசன்.

வெட்டையைப் போக்கடிக்க இது ஒரு

சைகண்ட மருந்து.

40 காப்ஸல்ஸ்களுள்ள பாட்டில்கள்.

கொனோசன் சீக்கிரம் எரிச்சலுண்டாவதையும் கொடூர நிமிர்ச்சியையும் தணிக்கிறது. இதுதான் மிகவும் மேலான மருந்து. இது இரைக்குடலைத் தொந்தரவு செய்யாமலும், அறுவருப்பையும் வாந்தியையும் உண்டாக்கமாட்டாதுந்தவிர குண்டிக்காய்க்குழியில் எரிச்சலுமுண்டு பண்ணாது. அநேக வைத்தியர்களிடமிருந்து நற்சாக்ஷி பெற்றுள்ளது. 15-மணி நேரங்களில் சொஸ்தமாகிறது. ஷை மருந்து மதுரை T. V. George & Co., யார் இடமிருந்து வாங்கிக்கொள்ளலாம்.

மெர்கல்.

கொடிய மேகரணத்தைத் தீர்க்க உள்ளே சாப்பிடுகிற மருந்து.

40 காப்ஸல்ஸ்களுள்ள பாட்டில்கள்.

மெர்கல் நல்ல ஜீரண சத்துயைக் கொடுக்கக்கூடியது. வயிற்றுவலியையாவது வயிற்று உளச்சலையாவது உண்டாக்கமாட்டாது. குண்டிக்காயிலும் எரிச்சல் உண்டாக்கமாட்டது.

மெர்கலினால் சொஸ்தப் படுத்தப்படும் வியாதிஸ்தர்களுக்கு யாதொரு வலிகளையாவது கெடுதல்களையாவது உண்டுபண்ணுகிற தில்லை. இதில் ரொம்பவும் முக்கியமாய் கவனிக்கவேண்டியவிஷயம் என்னவென்றால் இந்த மாதிரியாக வைத்தியஞ் செய்வதானது ஒருவருடைய அவஸ்தயை வெளிப்படுத்தாமல் செய்கிறது.

இது எல்லா ரசாயன மருந்து ஷாப்புக்காரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஏஜண்டுகள் தேவை. ஏஜண்டுகள் தேவை.

கேசர் பவுடர்.

அணியுங்கள். மணங்களியுங்கள்.

ஐயன்மீர்.

இதுகாறும் நம்மவர்கள் வெளியூர்களிலிருந்து வரும் (செண்டு) அத்தர்களை வாங்கி யுபயோகித்து வந்தனர். இனி, அவ்வளவு சிரமமும் செலவும் வேண்டியதில்லை. நமது பவுடரை யாம் பிரதிதினமும் பூசிக் கொள்ளும் சந்தனத்துடன் கலந்து உபயோகிக்கின் இந்திரனணியுங் கந்தமோவென்று யாவரும் மயங்க உள்ளக்களிப்பும் உவகையும் செய்து தெள்ளிதில் வாசனை செய்திடும். இது 64 வகை அற்புத மூலிகைகளும் நயமான புனுகு,சவ்வாது, கஸ்தூரி,குங்குமப்பூ,பச்சைக்கற்பூர முதலிய வாசனைத்திரவியங்கள்சேர்த்து நம்மவர்க்கென்றே பாகமாகச் செய்திருக்கிறது. இப்பவுடரை எள்ளளவு எடுத்து உயர்ந்தவேஷ்டிகள் சேலைகள் முதலியவற்றின் நடுவில் வைத்தால் வெளியூர்களிலிருந்துவரும்(பிட்டல்டஸ்டு)முதலிய வாசனைத்திரவியங்களைக் காட்டிலும் வாசனையாயிருக்கும். யான் கூறுவதாற் பயனில்லை. தாங்கள் ஒருமுறை வாங்கி யனுபவித்தால் தங்கள் மித்திரர்கட்கு இதன் பெருமை முதலியவற்றைத் தாங்களே கூறுவீர்கள்.

எங்கள் ஏஜண்டுகள்(S. I. Ry.)ரயில்வேக் கம்பெனியுள்ள இடங்கட்கெல்லாஞ் சென்று வருவதால் மற்றைய வியாபாரிகள் தங்கள் கம்பெனியில் உள்ள கிரயச்சாப்தா முதலிய நோட்டீஸ்களை 1000-க்கு ரூ. 1—0—0 வீதம் எங்கட்கனுப்பினால் ஏஜண்டுகள் எங்கள் நோட்டீசுகளோடு வெளிப்படுத்தி வருவார்கள்.

விலை,	தோலா	1	$\frac{1}{2}$	$\frac{1}{4}$
	ரூ	1—0—0,	0—9—0,	0—5—0.

தங்கம்,வெள்ளி,மெடல்களும் சர்ட்டிபிகேட்டுகளும்பெற்ற

பசலா கம்பெனி,

220/ சைனுபஜார் ரோட், (லா காலேஜுக்கு எதிரில்),
எஸ்பிளனேட், மதராஸ்.

201

(No. 1.)

THE TEST OF TIME!

FOR OVER THIRTY SEVEN YEARS

SCOTT'S EMULSION

has stood every rigid test that learned Physician could suggest.

LUNG TROUBLES,
COUGHS,
COLDS,
LOSS OF FLESH,
POOR APPETITE,

and as a Tonic and Tissue Builder for both Father and Son

Always get the Emulsion with this mark—the Fishman—the mark of the "Scott" process!

NOT TOUCHED BY HAND

FOR SALE AT ALL CHEMISTS.

SCOTT & BOWNE, Ltd.

MANUFACTURING CHEMISTS

LONDON, ENGLAN

202

(No 2.)

CHAMBERLAIN'S COLIC, CHOLERA AND DIARRHŒA REEDY.

வயிற்றுக்கடுப்பு, வாந்திபேதி, சீதபேதி இவைகளுக்கு

சேம்பர்லேன் துரை கண்டு பிடித்த

மருந்து.

இதனால்

வயிற்றுவலி, அதிசாரபேதி, சீதபேதி, வாந்தி பேதி, வயிற்றுக்கடுப்பு முதலான குடல் நோய்கள் பலவும் ஒழியும்.

இந்த ஆச்சரியமான மருந்து, உலகத்திலுள்ள மற்ற மருந்துகளைவிட மனுஷகோடிகளுக்குதவியாய் நின்று, நோயையும் வேதனையையும் நீக்கி அநேக ஆயிரம் உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறது.

இம்மருந்தை ஒருதரம் குடித்தாலும், எவ்வித கொடிய வயிற்றுவலியும் போய்விடும். பொல்லாத சீதபேதிக்கும், மூன்று தரம் குடித்தால் போதும்; அவ்வளவோடு வேதனை நீங்கும், வியாதியும் ஒழியும். எப்போதும் பலிக்கும் மருந்து, ஒருபோதும் தப்புவதன்று.

இது, மூலிகைகளால் ஆன மருந்து. கைபடாமல் செய்த மருந்து.

எங்கும் கிடைக்கும். சின்ன புட்டி. ரூ 1. பெரிய புட்டி ரூ 2.